சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்திஸ்வாமி துணை.

திருநாவலூர் மான்மியம்.

திருநாவலூர்த் தேவஸ்தானம் தருமகர்த்தா

தேவகோட்டை

ஸ்ரீமாந். ராமஅரு. அரு. ராம

அருணாசலச் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

ஸ்ரீ ல ஸ்ரீ

அம்பலவாண நாவலரவர்கள்

இயற்றியது.

இஃது

ஷை அருணாசலச் செட்டியாரவர்களால்,

மதுரை விவேகபாநு அச்சாபீஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1907.



உ

சிவமயம்.

திருநாவலூர் மான்மியம்.

உமாதேவியார் அருச்சித்த சருக்கம்.



அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாய், நிர்த்துவந்துவநிருபாதிக வஸ்துவாகிய பரப்பிரமம், பசுபதியாகிய சிவபெருமானே யென்பது வேத சிவாகம சித்தாந்தமாம். அச்சிவபெருமான் ஆன்ம கோடிகளெல்லாம் உய்யும் பொருட்டுப் பெருங்கருணையினாலே அக்கினிக்கு உஷ்ணம் போலவும் நீருக்குத் தட்பம்போலவும் தமக்கு வேறாகாது ஒன்றாய் விளங்கும் தமது சத்தியும் தருமபத்தினியும் உலகமாதாவுமாகிய உமாதேவியாரோடு கலந்து அருளானந்தக் கிரீடைசெய்து சாசுவதமாக வெழுந்தருளியிருக்கும் ஸ்தானம் ஸ்ரீ கைலாச பர்வதமாம்.

ஸ்ரீ கைலாசபர்வதத்திலே செம்பொற்றிருக்கோயிலிலே மந்திர சிம்மாசனத்தின்மீதே ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்களும், கங்கையையும் இளம்பிறையையும் அணிந்த கற்றைச் செஞ்சடையும், சங்கக்குண்டலம் தரித்த வலத் திருச்

செவியும், தோடிணி தணிந்து துலங்கிடும் இடத் திருச் செவியும், உலகங் காக்கவேண்டி நஞ்சுண்டு கறுத்த காளகண்டமும், நான்கு புயங்களும், அபயம் மழுப்பொருந்திய வலத்திருக்கைகளிரண்டும், வரதம் மான் தரித்த இடத் திருக்கைகளிரண்டும், பூணூல் எண்ணிறந்த பிரம விஷ்ணுக்கானுடைய எலும்பு மாலைகள் பிரமாவினது சிர மாலைகள் இவற்றை யணிந்த திருமார்பும் புலித்தோலுடைபொருந்திய பொலிதரு திருவரையும் வீரக்கழல் சிலம்பு அணிந்த இரண்டு திருவடிகளும் பொருந்தியதாய்த் திருவெண்ணீறு பரவப்பூசிய செம்பவளத் திருமேனிதாங்கிப் பச்சைப்பெண்ணாகிய உமாதேவியார் வாமபாகத்தில் மருவச் சிவபெருமான் நித்திய கல்யாணியாராகிய உமாதேவியாரோடு தமது திருமுகமண்டல நடுவில் விதான்றும் திருப்புன் முறுவலில் நின்றும் பொருந்தியிருக்கும் அருளானந்த வெள்ளம் ஆன்மகோடிகளது தாபத்திரயத்தை உபசமனம் செய்து குளிர்விக்குமாறு எழுந்தருளியிருக்கும் அவசரம் ஸ்ரீ கண்டமூர்த்தி அவசரமாம்.

ஸ்ரீ கண்டமூர்த்தியாகிய சிவபெருமான் உமாதேவியாரோடு அங்ஙனம் எழுந்தருளியிருப்பாராக ஒருநாள் உமாதேவியார் இருக்கைவிட்டு எழுந்து சிவபெருமானுடைய உபய சரணாரவிந்தங்களிலும் விழுந்து நமஸ்கரித்து நிற்ப, அது கண்டு சிவபெருமான் திருப்புன்முறுவல் இளநிலா முகிழ்ப்ப உமாதேவியாரை நோக்கி "பெண்ணே நின் உள்ளக்குறிப்பு

என்னை?" என்று வினவியருளினர். தேவியார் "சர்வலோகைக நாயகராகிய ஸ்வாமி! பூலோகத்திலே உயிர்கள் தேவரீரைச் சேவிக்கும்பொருட்டுத் தேவரீர் அருட் பிரசித்தகாமரூபந்தாங்கி எழுந்தருளியிருக்கும் முக்கியஸ்தலம் யாது? உரைத்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். அதுகேட்டு ஸ்வாமி "பெண்ணே! பூலோகத்திலே நமக்கு உவந்த ஸ்தலங்கள் காசி முதலாக எண்ணிறந்தனவாம். அவற்றுள் நாம் சோதிப்பிழம்பாய் நின்ற திருவண்ணாமலைக்கும் நாம் இருந்த சோதியாய் ஆனந்த நடனஞ்செய்யும் சிதம்பரமாகிய தில்லை வனத்துக்கும் நடுவே நிலைபெற்றுள்ளது திருநாவலூர் என்னும் திவ்விய ஸ்தலமாம். அங்கே பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் வந்து வேண்டிய வரங்களைப்பெற்று மீள்வார்கள். அந்தஸ்தலத்தில் சத்துவகுண பூதர்களாய் யார் யார் வந்து நம்மை வழிபடுவார்களோ அவர்களுக்கெல்லாம் வேண்டிய வரங்களைத்தந்து 'பக்தசகேசுவரன்' என்னும் நாமந்தரித்துச் சிவலிங்கத் திருமேனிதாங்கி என்றும் பிரசன்னமாய் எழுந்தருளியிருப்போம். அந்தஸ்தலத்திலே நீ சென்று அச்சிவலிங்கத்திருமேனியில் நம்மைப் பூசிக்கக்கடவாய். சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்களைந்தையும் செவ்வே செய்யும் செயல் வண்மையை உனக்குத் தந்தருளுவோம்" என்று கட்டளையிட்டருளினர். அதுகேட்டுத் தேவியார் திருவு

ளமகிழ்ந்து "பக்தசநேசவராகிய எம்பெருமானே, தேவரீர் திருவிளையாடலை என்னென்று சொல்வேன். தேவரீர் தமியேனது உள்ளக்குறிப்பினை இதுவென்றறிந்து அதற்குப் பொருத்தமாகத் தேவரீரைப் பூசிக்கும் வண்ணம் ஆஞ்ஞை தந்தருளினீர். உம்மைப்பூசிக்கும் ஆசை தலைக்கீடாய் எழுந்தெழுந்தோங்கி வருத்துகின்றது. ஆதலின் இப்பொழுதே விடைதருக" வென்று பிரார்த்தித்தார். கைலாசபதியார் தமக்குப் பிரிவாற்றாமை நேர்ந்தும், தேவியார்கொண்ட திருக்குறிப்புச் சிவகோடிகளெல்லாம் சிவபூசைசெய்து ஈடேறும் பெருங்கருணை பற்றியதே வேறில்லை ஆதலால் அப்பிரிவாற்றாமையைச் சகித்துத் "தேவி! நீ நல்ல காரியமே நினைந்தாய். நீ திருநாவலூரிற்போய் நம்மைப்பூசிக்க. நாம் தாழ்க்காது வந்து காட்சிதந்து உன் மனோரதங்களையெல்லாம் முற்றுவிப்போம்" என்று அருளிச்செய்தார்.

தேவியாரும் விடைபெற்றுக்கொண்டு தமது நாயகர்பாலன்பும் சீவர்கள்பாலருளும் பூண்டு திருமுகமலர்ந்து சேடியர்க ளெண்ணிறந்தோர் தம்மைச் சேவித்துவரத் தெய்வவிமானத்தின்மேல் ஆரோகணித்துத் தேவமாதர்கள் ஆடல் பாடல் செய்து மகிழ்விப்ப இனியவாத்தியங்கள் முழங்க மகாலட்சுமி வராகினி சூலினி சரசுவதி மாகேசுவரி முதலியோர் பல்லாண்டுசொல்லக் கோமடந்தையர்கள் இருபுறமுஞ்சாமரை வீசப் பூலோகஞ்செய்த தவப்பயனாய்த் தென்றிசை நோக்கி

வழியில் சிறப்புக்களையெல்லாங்கண்டு திருநாவலூர் என்னும் ஸ்தலத்தில் வந்து சேர்ந்தார். அப்பொழுது அத்திருநாவலூர் சிலமாயிருப்பதைத் தேவியார் கண்ணுற்று இரண்டு திருக்கண்களினின்றும் பாஷ்பம் பொழிய நெஞ்ச நெக்குருகிப் பரவசமாய்ச் சிரஞ்சேதாரணஞ்செய்து பக்தசநேசுவரர் திருவருளை நினைந்து தமது பக்கத்தில் தமக்குப் பணிபுரிந்து நின்ற சூலினியைப்பார்த்தருளினர். சூலினி அப்பார்வையினால் அம்மையாரது திருவுளக்குறிப்பை அறிந்து தன்னுடைய சூலத்தைப் பூமியிற் குத்தினள். உடனே சகல பாவங்களையும் அகற்றும் மகிமை யுடையதாய்ப் பாதாளகங்கை சிவஞானிகளுடைய உள்ளம்போலத் தெளிந்து கதித்தெழுந்து நிறைந்தது. அதற்குச் 'சாம்பூநதீர்த்தம்' எனப்பெயர் தந்து பார்வதி தேவியார் எல்லாத் தேவமாதர்களோடும் அத்தீர்த்தத்தில் நீராடிச், சூலினி சரசுவதி துர்க்கை இலக்குமி முதலிய அத்தேவமாதர்கள் சூழக் கோபுரவாயிலை யடைந்து உள்ளேபோய்த் திருமூலலிங்கப்பெருமானைப் பூசிக்கத்தொடங்கி ஆலயத்தின்முன்னே எழுந்தருளியிருக்கின்ற நாவலடியில் விநாயகரைப்பார்த்தருளினர். அம்மையாரது திருக்குறிப்பை மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுள் அறிந்து திருவுள மகிழ்ந்து பாதங்களை நமஸ்கரித்து நந்தவனம் புகுந்து பரமசிவார்ச்சனைக்குரிய நறுமலர்களைக் கொய்துவந்து உபகரித்தார். அம்மையார் உபகரணங்கள் சகலமும் அமைத்துக்

கொண்டுவந்து மாசிமாதத்தில் அபரபட்சத்தில் சதுர்த்தசி திதியில் வரும் மகாசிவராத்திரியில் முதலிரண்டு சாமங்களி லும் பூசையை விதிப்படிமுடித்து மூன்றாவது யாமத்தில் தமது இளையபிள்ளையாராகிய கந்தஸ்வாமியைப்பார்த்தருளலும் அவர் தமது அம்மையார் திருக்குறிப்பையறிந்து சாம்பூநத தீர்த்தத்தின் பக்கத்தில் தமது வேலாயுதத்தினாற் குத்துதலும் உடனே பாதாளத்தினின்றும் திவ்விய கங்கை வெளிவர அதை உமையம்மையார் கண்டு அதற்குச் 'சத்திவேலதீர்த்த' மென்று நாமந்தரித்து அத்திவ்விய தீர்த்தத்தால் மூன்றாவது யாமத்தில் ஸ்வாமிக்கு அபிஷேகஞ்செய்து பூசித்து நாலாவது யாமத்திலும் அப்படியே பூசைசெய்து ஸ்தோத்திரம் பண்ணிச் சிரசின்மேற் கரகமலங்களைக் குவித்துக் கும்பிட்டுப்பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து பூசையை முடித்துக் கொண்டு பரமசிவத்தைச் சோதி சொரூபமாகக்கண்டு

பணிமதிய நதியிதழி மலரொளிர் செஞ்சடில மெனும் பவளக் காடு, மணிமகரக் குழைச்செவிபு மகிழ்கருணை பெருகுவிழி வதனத் தேசக், திணிபுயமும் விடமிலங்கு மணிமிடறு மபயமெனச் சிறந்த கையு, மணிகழலுந் திருவடியும் வெண்பொடியா ரழல்வடிவு மமர்ந்த தேவை. (அ)

சித்திரமா புலகனைத்து நிறைந்தவுயிர் தொகுமொருவிரு விசும்ப, வத்துவைமெய் யடியருள மகலாத பரம்பொருளை மனவாக் கெட்டாச், சத்தசெழுஞ் சுடரொளியை மறைமுடிவி னடனமிடும்

*தொல்லைவாழ்வை, யத்தனைத்த னைத்திருத்தி யாக்கைப் பெருங்க
டலு ளழுந்தினால்.* (2)

என்று கூறிய பிரகாரம் சிவானந்தக் கடலுள் மூழ்கினர். சாமானியர்களாகிய நரர்களே தம்மைப் பூசை செய்ய அதற்குத் திருவுளமிரங்கி அருள்புரியுங் கருணைக்கடல் தமது ஏக நாயகியார் தாமே தம்மின் வேறறத் தாமேயாகிய தமது தாதாத்மிய சக்தியாரே *சேட சேடி பாவம் பேணித் தம்மைப்பூசை பண்ணுவாரானால் அப்பூசைக்கிரங்கி யருளும் அருளளவையும் அன்பளவையும் இன்னதென் றறியற்பாற்றோ !! பூசைசெய்து ஸ்தோத்திரஞ் சொலித்தனை நினை புண்ணியர்பால் நண்ணற் காசை செய்திடும் அம்பலக்கூத்தர் அம்பிகையாருடைய பூசைக்கும் தியானத்துக்கும் மகிழ்ந்து எளிவந்து விஷய பூதராய் அவரது இருதய புண்டரீக மத்தியில் தகராகாசத்தில் தமது நாதமாகிய திருச் சிலம்பொலி கேட்பித்துத்தமது அத்தியற்புத அமரிமிதானந்த நடனசோதி சொரூபங் காட்டியருள, அம்மையார் அதில் விளைந்த ஆனந்தத் தேனை யுண்டு இறுமாந்து களிக்கடலின் மூழ்கினாராக, ஸ்வாமி புறத்தும் அப்படியே காட்சி தந்தருளத் திருவுளங்கொண்டு அந்தரதுந்துபிகள் முழங்கக் கந்தருவர்கள் இசைபாட நட்டிய மகளிர் நடனஞ் செய்ய ஏவன் மகளிர்கள் சாமரை வீசத் தேவர்கள் 'அரகர' வென்று புஷ்பமாரி பொ

---

*ஆண்டானடிமைத் தன்மை

ழிய வேதியர்கள் வேதங்களை உத்கோஷிக்கப் பத்தர்கள் களிப்ப இடபாரூடராய் வெளி வந்து திருமுக மண்டலத்தில் திருப்புன்முறுவல் காட்டி நின்றருள, அம்மையார் எம்பெருமானுடைய பிரசன்ன விலாசத்தில் விளங்கிய அதிமோகன சைதன்னிய சிருங்கார செளந்தரிய மென்னும் மதுவைத் தமது திருக்கண்களாகிய வண்டுகள் உண்ணக்கண்டு எம்பெருமானுக்கெதிரே செல்ல, எம்பெருமானும்எம்பிராட்டியாரை ரோமாஞ்ச முண்டாகத் தமது மார்போடு இறுக ஆலிங்கனஞ்செய்து காமாந்தராகிய தாம் அவ்வாலிங்கனத்தில் அதிமோகிதராறுரென்னும் அருள் நாடகங்காட்டி எம்பெருமாட்டியாரது திருமுக பத்மத்தில் நாட்டஞ்செய்து 'தேவி! ஹரிக்கமுடியாத நமது மனசை ஹரித்து நமக்கு மகா மனோஹரியாய் நம்மை நினது மனக்கோயிலில் அடைத்து உனது தியான மார்க்கத்தில் நம்மை வைத்தமையால் நினக்கு மனோன்மணியென்னும் பெயர் வழங்குக. நீ பஞ்ச கிருத்தியங்களைச் செய்யவும் உனது மனதில் எண்ணிய எண்ணிய காரியங்களையெல்லாம் எண்ணிய எண்ணியவாறு இயற்றவும் நினக்கு வரமளித்தோம். அதுவுமன்றிப் பக்த சனங்கள் நின்னையும் நம்மையும் ஏககாலத்தில் ஏகவொளுவிற் கண்டு சேவிக்கும்படி நீ நமதுவாமபாகத்தில் மருவுக" வென்று அருளிச்செய்து அம்மையாரைத் தமது அருட்கரங்களால் தூக்கியெடுத்துத் தமது வாமபாகத்தில் மனமகிழ்ந்து இருத்

தியருளினர். சத்திசிவமென்னும் இருவரும் நாயிகா நாயக பாவத்தால் ஸ்திரீபுமான்களாய் இடமும் வலமுமாகத் தரும தேவதாரூப ரிஷபாரூடர்களாய்க் காட்சி தந்தருளிய ஏக அருட்கொலுவைத் தேவர்களெல்லாங்கண்டு இமையா நாட்டம் பெற்றபேறு இன்று பெற்றேம் என்று மகிழ்ந்து அம்மையும் அப்பரும் ஆகிய இருமுது குரவர்களது பாத பத்மங்களிலும் விழுந்து நமஸ்கரித்துப் பலவிதமாகிய ஸ்தோத்திரங்களைப் பண்ணினார்கள். அத்தேவர்கள் 'எம்பெருமானே! தேவரீர் ஓர்பக்கத்தும் அம்மையார் ஓர்பக்கத்தும் ஏக அவசரமாய் எழுந்தருளியிருக்கும் இந்தமகா மங்கள அருட்கொலுவை என்றும் சுரர் நரர் முதலிய பக்த ஜனங்களெல்லாம் தரிசிக்கும்பொருட்டுத் திருவருள் செய்க' வென்று பிரார்த்தித்து அப்படியே வரமும் பெற்றுச்சென்றார்கள்.

அந்நாள் தொடுத்துத் திருநாவலூரில் அம்மை பெயர் மனோன்மணி யென்று வழங்கி வருவதாயிற்று. மாசி மாசத்து அபரபக்கத்துச் சதுர்த்தசி திதியில் வரும் மகாசிவ ராத்திரியில் மனோன்மணி சமேதராகிய பக்தசனேசுவரரைப் பூசிப்போர் முத்தியை யடைவார்கள். அம்மகா சிவராத்திரியில் அன்போடு பசுவின் நெய்யினால் பக்தசனேசுவரரது ஆலயத்தில் திருவிளக்கிடுவோர் மூன்றுலகங்களுக்கும் அதிபதிகளாய்ச் செங்கோல் செலுத்தி நெடுநாள் அரசுபுரிந்து அதன்மேல் சிவலோகத்தை யடைவார்கள். அம்மகா சிவ

ராத்திரியில் முத்தளம் பொருந்திய வில்வங்களைக்கொண்டு பக்தசநேசவரரை அருச்சித்தவர்கள் சிவசாரூப்பிய முத்தியைப்பெறுவார்கள். இன்னும் அம்மகா சிவராத்திரியில் திருநாவலூரில் சாம்பூநத தீர்த்தத்தில் நீராடி முதலாவது யாமத்தில் இடபமும் இரண்டாவது யாமத்தில் கோவும் மூன்றாவது யாமத்தில் திலமும் நான்காவது யாமத்தில் பூமியும் மறுநாட் காலையில் கன்னியும் தானஞ் செய்தவர்கள் ராச வம்சத்தில் பிறந்து வெண்கொற்றக் குடைநிழலின் கீழிருந்து செங்கோல்செலுத்தி இஷ்டபோகங்களெல்லாம் நுகர்ந்து பெரும்புகழ் நிறுவி அதன்மேல் சிவபதத்தையடைவார்கள். சத்திதீர்த்தத்தில் மூழ்கினோரும் அதனை யுட்கொண்டவர்களும் தீவினைகளும் நோய்களும் நீங்கி இன்புற்று வாழ்ந்து சிவலோகம்பெறுவார்கள். அத்தீர்த்தத்தைக்கொண்டு சந்தனக் குழம் பனாவிப் பக்தசநேசவரருக்கு அபிஷேகஞ் செய்வித்தோர் சிவசாரூப்பியம்பெறுவார்கள். எந்தக்கருமத்தாலேனும் திருநாவலூருக்குவந்து சிரமத்தினால் ஒருநாள் பொறுத்திருந்து புறப்படுவோர், அங்கு ஒருநாள் தரித்திருந்தவர்கள் இல்லறத்திலிருந்து இனிது வாழ்ந்து முடிவில் சிவபாதாரவிந்தத்தைத் தியானித்துப் பரகதிபெறுவார்கள்.

உமாதேவியார் அருச்சித்த சருக்கம்

முற்றிற்று.

சிவமயம்.

விஷ்ணு பூசித்த சருக்கம்.

கிருதயுகத்திலே இராக்கதர் குலத்திலே இரணியன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் வெகுநாள் அரிய தவங்கள் செய்து நிலம் நீர் தீ காற்று முதலிய பூதங்களினாலும் பறவைகளினாலும் மிருகங்களினாலும் சுரராலும் நரராலும் இரவிற்றான் பகலிற்றான் நாசமெய்தாத பெரு வரம் பெற்றவன். தேவர்கள் முனிவர்களை யெல்லாம் மதியாது அவர்களுக்கு இடர் செய்யும் வன்கணாளன். அவன் பூமி முதலிய உலகங்களி லெல்லாம் வேத வொழுக்கங்களை விலக்கி எல்லாரும் தனது நாமத்தையே மந்திரமாகக் கொண்டு உச்சரிக்கும்படி செய்தான். அவன் திக்குகளிலெல்லாம் போய் இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்னும் திக்குப் பாலர்களையும் மற்றும் தேவர் முதலியோர்களையும் தனது புய பராக் கிரமத்தால் வென்று அவர்களெல்லாம் தினமும் தன்பால் அச்சத்தோடு வந்து தத்தமக்கு இயன்ற பணிகள் செய்ய அரசு வீற்றிருந்தான். அவனுக்குத் தடையை கிடையாது.

அவன் செய்த இடுக்கண் சகிக்காது ஒரு காலத்தில் இந்திரன் தேவர்களோடு பாற்கடலில்பள்ளி கொள்ளும் மகா

விஷ்ணு விடத்திற்போய் அடி பணிந்து பகைவனாகிய அவனைத் தொலைத்துத் தங்களுக்கு அபயந் தந்து தங்களைப் பாது காக்கும்படி பிரார்த்தித்தான். அது கேட்டு "அப்படியே செய்வோம் நீங்கள் உமது பதிக்குச் செல்லுங்கள்" என்று விஷ்ணு ஆஞ்ஞாபிக்கத் தேவர்கள் ஸ்தோத்திரம் பண்ணித் தங்கள் பதிக்குச் சென்றார்கள்.

அதன்பின் இரணியனோ மகா வலியன். அவனைத் தொலைக்கும் உபாயம் யாது என்று மகா விஷ்ணு தமது உள்ளத்தில் ஆராய்ந்து சர்வசத்தராகிய சிவபெருமான் கருணை புரிந்து வரம் தருவாராளுல் இன்று தானே அவ் விரணியனைத் தொலைக்கும் வலி நமக் குண்டாமென்று துணிந்து தமது அரவணையை விட்டெழுந்து, பூலோகத்திலே முதல்வராகிய சிவபெருமான் சர்வான்மாக்களுக்கும் அருள் புரியும்படி திருவுளங்கொண்டு எழுந்தருளியிருக்கும் அதி பரிசுத்த திவ்விய ஸ்தலம் யாது என்று அநேக ஸ்தலங்களை யெல்லாம் மனதில் வைத்துச் சீர் தூக்கிப் பார்த்துத் தெளிந்து, தமது மனக்கவலை நீங்கி இருகண்களினின்று ஆனந்த பாஷ்பம் பொழிய, எல்லாத் தலங்களுள்ளும் உயர்ந்ததாய்ச் சிவபெருமான் தமது பத்தர்களுக்கு அவர்கள் எண்ணியதைப் பார்க்கிலும் மிக அருள் செய்யும் பொருட்டுப் பக்தசனேசுவரர் என்னும் மகா மகிமை நாமம் வகித்து வீற்றிருந்து உமையம்மையார் தம்மை வந்து பூசை செய்ய அவ்வுமையம்மையாருக்கு

அருள் செய்து பெரும் புகழ் படைத்த பரிசுத்த திவ்விய ஸ்தலம் திருநாவலூர் என்று துணிந்து அங்கே வந்து பக்தசநேசுவரரைப் பூசிக்கும்படி பாற் கடலினின்று புறப்பட்டு, அநேக நாடுகளையெல்லாம் தாண்டித் தமிழ் நாட்டிலுள்ள நடு நாட்டை யடைந்து அந்த நடு நாட்டில் பெரு நாவலர் புகழும் திருநாவலூர் என்னுந் திவ்விய ஸ்தலத்தினது கோபுரத்தைத் தூரத்தே கண்டு அடியற்ற மரம்போல் நிலத்தில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து திருநாவலூரில் வந்து சேர்ந்தார்.

சேர்ந்த மாத்திரத்தில் உடலெல்லாம் ரோமாஞ்சமுண்டாகக் கண்களினின்றும் ஆனந்த வெள்ளம் பொழிய மனமானது அழலிடைப்பட்ட மெழுகு போல நெக்கு நெக்குருகச் சிவன்பாற்பத்தி இவ்வண்ண மெல்லாஞ் செய்யுமோவென்று நயந்து வியந்து ஆவண வீதியைக் கண்டு வணங்கித் தேவர்குழாம் நெருங்கிய கோபுர வாயிலையடைந்தார். கிருபா சமுத்திரமாகிய பக்த சநேசுவரரது சந்நிதியைக் கண்டார். கனிபூறமிர்தத்தை உட்கொண்டார். கரகமலம் சிரமேற்கொண்டார். ஆனந்தக் கூத்தாடினார். பக்த சநேசுவரரை வாழ்த்தினார். இத்தன்மையராகிய மகா விஷ்ணு திருக்கோயிலுக்குள் மேற்றிசையில் தமது வில்லையெடுத்து வளைத்து மூன்று பாணங்களைப் பூட்டி எவினார். அப்பாணங்கள் மூன்றும் பூமியைப் பிளத்தலும் பிளந்த சதுரமாகிய பிரதே

சத்தினின்று பாதாள கங்கை யெழுந்து நாற்றிசையும் மூட்டி நிறைந்தது. அதற்குச் 'சக்கர தீர்த்த' மெனப் பெயர் தந்து தமது கையில் சக்கரத்தையும் பாஞ்சசன்னிய மென்னும் சங்கையும் அதிற் சேர்த்தார். அச்சக்கர தீர்த்தத்தின் கரையிற்றானே பாதகனாகிய இரணியன் நாசமுறவேண்டி வேதம் விதித்தபடி மகத்தாகிய யாகத்தைச் செய்தார். அதன்மேல் சாம்பூநததீர்த்தத்தில் நீராடிப் பஸ்ம ருத்திராக்ஷங்களை அணிந்து சிவனடியைச்சிந்தித்து மனோன்மணி சமேதராகிய பக்தசனேசுவரரை வலமாகவந்து விக்கினேசுவரர் சந்நிதியில் ஆவணிமாசத்துப் பானுவாரத்தில் திருவாத்திமலர்மாலைசாத்தித் தேங்காய் முப்பழம்மோதகம் நிவேதனஞ்செய்து சிவலிங்கப் பெருமானுக்கு நல்லெண்ணெய் கருப்பஞ்சாறு தயிர் நெய்தேன் செவ்விளநீர் சுகந்தபொடிமாக்காப்பு நெல்லிக்காப்பு வாழைப் பழம் சந்தனம் சர்க்கரை பால் சுத்தோதகம் முதலிய வற்றால் அபிஷேகஞ்செய்து பரிவட்டஞ் சாத்திச் சொர்ண ரத்தினாபரணங்களைத் தரித்து மாலை சாத்தித் தூபதீபங் காட்டி நைவேத்தியம் சமர்ப்பித்து மற்றும் உபசாரங்கள் செய்து அம்மைக்கும் இதே பிரகாரம் பூசை செய்து திரி சதார்ச்சனை பண்ணி ஸ்வாமியை வலம் வந்து நமஸ்கரித்து வாழ்த்தினர். மகாவிஷ்ணு செய்தபூசையையும் அவரது அன்பையும் கண்டு மனோன்மணி சமேதராகிய பக்தசனேசுவரர் இடபாரூடராய்க் காட்சி தந்தருளினர். விஷ்ணு தரிசித்

துத் தோத்திரம் பண்ணினர். ஸ்வாமி திருவுள்ள மிரங்கி விஷ்ணுவே! யாது வரம் விரும்பி நம்மைப் பூசித்தாய் சொல்லுக அவ்வரத்தைத் தருவோம்" என்று அருளிச்செய்ய விஷ்ணுவானவர்.

"ஐம்பொழிந்த நிறையாகி யெப்பொருளுமாகி யப்பொருளு மல்லவாய், மூர்த்திகள் மறையு மறிவதற்கரிய மூலமாகி யடியார் கடந்து, சிந்தையஞ்ச விருள்கிழித்த ஞானவொளி செய் திவாகரனுமா கிய, வெள்ளையே புளகிதம்புகின்ற தெனவிருளைகூப்பி யெதிர் கின்றதோ.'

என்று துதித்து நின்று இரணியனென்பவன் விலங்குகளால் பறவைகளால் நரர் மனிதர் தேவர்களால் படைக்கலங்களால் நாசமெய்துதலின்றித் தனது உடம்பினின்றும் ஒரு துளி இரத்தம் கீழே விழின் அதினின்று பல ரூபங்களுண்டாகும்படி வரம்பெற்றுப் புய பராக்கிரம சாலியாய்த் தேவர்களையெல்லாம் வென்று "இரணியாய நம" வென்று தன் பெயரையே எல்லாரும் சொல்ல விதித்தான். வேதாகம புராண கலைகள் விளங்கவும் ஐந்தரு நிழற்கீழ் இந்திரன் வாழவும் மாதவர்கள் நெறி வழாது தவமுயலவும் பாதகனாகிய அரக்கன் மார்பைப் பிளந்து உதிரபானம் பண்ணுதற்குரிய ஆயுதமாக எனது கைநகம் அமையவும் நான் ஒரு நரசிங்கமாக அவதரிக்கவும் எனக்கு மந்திரோபதேசம் தேவரீர் அருளிச்செய்தல்வேண்டும். அரக்கனுடைய உயிர் கவர்ந்தபின்

அடியேனைக் காப்பதும் தேவரீர் கருணையேயாம்.” என்று விஷ்ணு வரம் வேண்டினர். அது கேட்டுச் சிவபெருமான் விஷ்ணுவினது செவியில் மந்திரோபதேசம் பண்ணி “விஷ்ணுவே! உன் மனசில் இந்த மந்திரத்தை ஸ்மரிப்பாயானல் நீ நினைந்த காரியங்களெல்லாம் முடியும்” என்று உறுதி மொழி அருளிச்செய்து மறைந்தருளினர்.

மகாவிஷ்ணு சிவபெருமானை மந்திர குருவாகத்தியானம் பண்ணிச் சக்கரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து உடல் முழுதுந் திருவெண்ணீறணிந்து சிரம் கழுத்து முதலிய விடங்களில் உருத்திராக்ஷம் தரித்து அம்பாசமேதராய் இடபாரூடராய் ஸ்வாமி அருளிச்செய்த மந்திரத்தை மனசில் இலட்சம் உரு ஜபித்துக்கொண்டிருந்தார். இது இப்படி நிகழ,

இரணியன் தனது பிள்ளையாகிய பிரகிலாதன் என்பவனைப் பள்ளிக்குவைத்த சமயத்தில் உபாத்தியாயர் ‘இரணியாயநம’வென்றுசொல்லும்படி அந்தப் பிள்ளைக்குச்சொன்னர். அது கேட்ட பிரகிலாதன் அப்படிச்சொல்லுதற்கு உடன்படாது மறுத்து வேத சம்மத மிதுதான் என்று அட்டாக்ஷர மந்திரத்தைச் சொன்னன். உபாத்தியாயர் பயந்து இரணியனிடத்திற்போய் உமது பிள்ளை பிரகிலாதன் உம்மை யிகழ்ந்து அட்டாக்ஷர மந்திரத்தைச் சொன்னன் என்றுசொன்னர். என்ற மாத்திரத்தில் இரணியன் மகனை யழைத்து

வரும்படி ஏவலாளர்களை யனுப்ப உடனே அவர்கள் அழைத்துக்கொண்டு வந்தார்கள். இரணியன் மகனைப்பார்த்து 'நீ யாது சொன்னாய்' என்று கேட்டான். வேதப்பொருளை யுணர்ந்து தெளிந்த புத்திமானாகிய மகன் 'நல்லதைத்தான் சொன்னேன்' என்றான். இரணியன் 'குழந்தாய் நல்லதைத் தான் சொன்னேன் என்றாய். அதை இன்னதென்று சொல்லுக' என்றான். சாதுவாகிய பிரகிலாதன் இரணியனென்னும் வன்மனக் கயவனைப்பார்த்து 'ஓம் நமோ நாராயணாய' என்று சொன்னான். அவன் சொன்ன மாத்திரத்தில் இரணியன் வெகுண்டு யமனை யழைத்து 'இவன் உயிரைக் கவரக் கடவாய்' என்று விதித்தும் இன்னுமடாதனவாகிய தீமைகள் பலவற்றைச் செய்தும் இடர்ப்படுத்தினன். படாத இடர்கள் எத்தனையோ பட்டும் பிரகிலாதன் எவ்வாற்றானும் துன்புற்றானல்லன். தான் சொன்ன அட்டாக்ஷரத்தையே மேன்மேலும் சொல்லும் விரதமுடையவனாயினன். இரணியனோ எத்தனை தீமைகள் செய்தும் ஒன்றாம் அவன்பாற் பலிக்காமையினால் மனம் சலித்தவனாய் 'ஏட இத்தனை விவாதம் செய்கின்றாயே, உனது நாராயணன் எங்கேயிருக்கின்றான் சொல்.' என்றான். பிரகிலாதன் 'அவன் பூமியிலும் மற்றெவ்விடங்களிலும் இருப்பான்' என்று சொன்னான். 'இத்தூணில் இருப்பானோ' என்று இரணியன் கேட்டான் இருப்பானென்று பிரகிலாதன் சொன்னான், இரணியன் அத்தூ

தானைக் கையா லறைந்தான். மகாதேவர் உபதேசித்த மந்திரப்பொருளை மனதில் வைத்து இலட்சம் உரு எற்றிச் சித்திபெற்ற நாராயணர் பிரகிலாதன் மகிழத் தமது முடி அண்ட முகட்டை வருட அசுரர் இராக்கதர்கள் அஞ்ச அநேகங் கைகளோடு அக்கை நகங்கள் ஆயுதங்களாய் அமையக் கண்களினின்றும் தீச்சுவாலைகள் கால கடைவாயில் வச்சிர தந்தங்கள் இலங்கப் பூமி ஆகாயம் மற்றை இடங்களிலுள்ள சிவராசிகளெல்லாம் நடுநடுங்கத் திக்கயங்களெல்லாம் ஓடக் குலபர்வதங்களும் அண்டமும் வெடிக்க நரசிம்மமாய்த்தோன்றி ஊழி இடிபேறுபோல இடித்து இரணியன் சேனைகளாகிய அரக்கர்களையெல்லாம் கொன்று தொலைத்தார். அதன்மேல் இரணியன் தேவர்களெல்லாம் அஞ்சும்படி கொதித்தெழுந்து பொருதான். நரசிம்மமூர்த்தியோடு இரணியனும் பலவிதமான யுத்தங்களைச் செய்ய அவனோடு தாமும் பூமிக்கும் ஆகாயத்துக்கும் முட்டி எதிர்பொருதுநின்றார். முடிவில் நரசிம்மமூர்த்தி இதுதான்சமயம் இதுதான் இடம் என்று கண்டு மாலைக்காலத்தில் அரண்மனை வாயிற்படியில் அவனைப்பிடித்துத் தொடைமேல் வைத்துத் தம்முடைய நகத்தை மார்பில் ஊன்றிப் பிளந்து இரணியனைக் கொன்றார். அவ்விரணியனது மார்பத்தினின்றும் இரத்தவெள்ளம் வெளியே கக்க அதனையுண்டு அதனால் மதமேற்கொண்டு மூவுலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் கலவிகரிக்கும்படி புறப்பட்டார். தேவர்களை

ல்லாம் அதனைக்கண்டு பயந்து திருநாவலூரில் பக்தசனேசுவரர் சந்நிதியில் வந்து 'கிருபாசமுத்திரமாகிய ஸ்வாமி! நரசிம்மத்திற்குப்பயந்து தேவரீர்பாற் சரண்புகுந்தோம். உமக்கே அடைக்கலம்' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். ஸ்வாமி 'தேவிர்காள்! நீவிர் அஞ்சற்க' வென்று அபயம் தந்து தமது அம்சத்தால் சரப ரூபத்தைக்கொண்டு நரசிம்மத்தினது மார்பில் துண்டத்தாற் கொத்தி இரத்தத்தை யுண்டார். நரசிம்மமாகிய விஷ்ணுவும் தமது மதத்தோடு மயக்கமும் நீங்கி 'இலக்குமி சரஸ்வதி இந்திராணி முதலிய தேவமாதர்களது மங்கல சூத்திரம் தழைக்க ஆலாகலமுண்டு தேவர்களைக்காத்த எம்பெருமானது அருள் இருந்தபடி என்னே' என்று வேதாகமங்களால் பலமுறை வாழ்த்திய பக்தசனேசுவரரது அருளும் அனுமதியும் பெற்றுத் திருநாவலூரில் ஆலயத்தின் மேற்றிசையில் சக்கரதீர்த்தத்தின் கீழ்பால் இலட்சுமி தேவியோடு கோயில்கொண்டு வீற்றிருந்தார்.

ஆவணி மாசத்தில் பௌர்ணமியில் சக்கரதீர்த்தத்தில் நீராடினோர் சகல வினைகளினின்றும் நீங்கிப் பொன்னுலகம் புக்கு அரசாள்வர். திருநாவலூர் என்னும் ஸ்தலத்தில் வந்தோர் சத்துருக்களை வென்று துன்பம் நீங்கி இன்புற்று வாழ்வார்கள். பக்தசனேசுவரரது பாதத்தை நினைத்தோரும் அப்பலத்தைப் பெறுவார்கள். பக்தசனேசுவரரது பாதத்தை யறிந்த மெய்ஞ்ஞானிகள் வினையினீங்கிச் சிவ சாயுச்சியம் பெறுவார்கள்.

விஷ்ணுபூசித்தசருக்கம் முற்றிற்று.

சிவமயம்.

சண்டேசுரர் பூசித்த சருக்கம்.

நடுநாட்டிலே பெண்ணையாற்றங் கரையிலே திருவெண்ணெய்நல்லூர் என்னும் நகரம் ஒன்றுளது. அத்திருவெண்ணெய்நல்லூரிலே அரசர் குலத்திலே பசுபதி என்பவன் ஒருவனிருந்தான். அவன் மகா குணவான். சிவபத்திமான். சுத்தமான அறிவுடையோன். பஸ்ம ருத்திராக்ஷாபரணன். சிவாராதன தற்பரன். மகைசுவரியவான். அழகன். புத்திரபாக்கியன். பக்தசனப்பிரியன். தாதா. இரக்கோர்களும் தபசிகளும் வந்தால் அகமும் புறமும் மலர்வான். இந்த இயல்புகளையுடைய பசுபதி யென்பவன் பெருங்கீர்த்திமானாய் வாழுநாளில் வெண்மை கருமை செம்மை புகர் புகைமை பொன்மை பிசங்கம் என்னும் நிறங்களையுடைய மூவாயிரம் பசுக்களை இடையர்களிடத்தில் மேய்க்கும்படி ஒப்பித்து அவற்றின் பாலைத் தேவர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிராமணர்களுக்கும் சேர்க்கும்படி ஏற்பாடு செய்தான்.

எந்தக்காலமும் வழுவாமல் அந்த ஏற்பாடு நடந்துகொண்டு வருநாளில் ஒருநாள் அப்பசுநிரைகளில் ஒருநிரை திருநாவலூருக்குச் சமீபத்திலே போய் மேய அந்நிரைக் குரிய இடையர்களை யேவிக் கலியாண ரென்னுஞ் சிவத்துவிசரையும் அவர் பிள்ளையையும் அவ்விடையர்களுக்கு அதிபதிகளாக

ப் பேசி அப்பசு நிரையின் பாலை நாலுபங்காக்கி ஒருபங்கை த் திருநாவலூர்ப் பசுபதீசுவரருக்கும் ஒருபங்கை வேத யோதும் விப்பிரருக்கும் ஒரு பங்கைக் குழந்தைகளுக்கும் ஒரு பங்கைத் தனக்குந் தரும்படி செய்தான். இடையர்க ள் அப்பசு நிரையை மேய்த்து இந்தப்பிரகாரம் செய்து வ ருநாளில்; அக்கவிபாண சிவாசாரியருக்குத் தவத்தால் வந்த வதரித்த குமாரரும் திருநாவலூர்ச் சிவமறையோர் குலத்து க்கெல்லாம் ஒரு கம்பியும் வேதங்களை அத்தியயனம் பண்ணி யவரும் மூன்று காலம் ஸ்நாந நியமமும் இரண்டு காலம் அக் கினிகார்ய நியம முடையவரும் சிவதீக்ஷாவானும் சிவபூசார் கருமாகிய சிவப்பிரியரென்னும் புத்திரர் தகப்பனாரது ஏவ லினால் பசு நிரைக்குப்போய் மிகுந்த விருப்பத்தோடு வலஞ் செய்து கறந்த பாலில் ஸ்வாமிக்குரிய பாகத்தைச் சமர்ப்பி த்து மிகுந்த பக்தி செய்துகொண்டு வந்தார். இப்படி வரு நாளில் ஒருநாளில் ஸ்நாநாதி நியமமுடித்து ஆலயம்புகுந்து அபி ஷேக சமயத்தில் வந்திருந்த பாலை பார்த்து மனம் நிறையா மல், சொர்ணபரண சகிதங்களாகிய ஐஞ்ஞூறு பசுக்களைக் க ன்றுகளோடு வேதியர்களுக்குத் தானம் பண்ணுவதைப் பார் க்கினும் ஒரு கபிலைப் பசுவின் பாலைச் சிவபெருமானுக்கு அ பிஷேகம் பண்ணிய பலன் பெரிதாகும். நூறு குடம் பாலை வேதியர்களுக்குக் கொடுப்பதைப் பார்க்கினும் ஒரு குடம் பால் சிவபெருமானுக்கு அபிஷேகித்தால் அதன் பலன் ஒன்

று பத்து நூறு ஆயிரம் கோடியாகப் பெருகும் என்று தம் மனசில் எண்ணிப் பசு நிரையிற் போய்க் குழந்தைகளுக்குரிய பாகத்திற் பாதியும் வேதியர்க்குரிய பாகத்திற் பாதியும் அரசனாகிய பசுபதிக்குரிய பாகத்தின் முக்காலுமாக எடுத்து ஸ்வாமி பாகத்தோடு சேர்த்து எல்லாம் சேர்ந்த பாற்குடத்தை இடையர்களாற் சந்நிதியிற் கொண்டுவந்து சேர்த்துச் சாம்பூநத தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து நியமங்களை முடித்து ஸ்வாமியை அருச்சித்துத் தைலம்மாக்காப்பு ரசபஞ்சாமிர்தம் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் நெய் தான் கொண்டுவந்த பால் தயிர் தேன் கருப்பஞ்சாறு பழம் தீர்த்தம் அன்னம் பூரண கும்ப தீர்த்தம் பனிநீர் அர்க்கிய சலம் இவற்றால் சங்கினால் அபிஷேகித்தும் பசுவின் கொம்பினால் மந்திரங்கொண்டு அடியால் முகந்து சிவலிங்கத்துக்கு நாலங்குலம் மேலாக நனியால் அபிஷேகித்தும் வேதாகம விதியினால் சமித் தோம மாயிரம் ஆகுதிசெய்தும் வஸ்திரம் ஆபரணம் புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்தும் பாலும் அன்னமும் ஸ்வாமிக்கு நிவேதித்து வில்வத்தினால் சகஸ்ர நாமார்ச்சனை செய்து சர்வோபசாரங்களையும் செய்து மனமுருகிக் கண்ணீர் பொழியச் சிரசின்மேற் கைகுவித்து வலஞ்செய்து நமஸ்கரித்து எழுந்து நாத்தழுதழுப்ப ஸ்தோத்திரம்பண்ணியபின் மனோன்மணியாருக்கும் முறைவழாது பூசை செய்தார்,

இப்படிப் பூசை செய்யும் நாளில் பிதாவிடத்தில் இடையர்கள் வந்து நடப்பை அழுது சொல்லப் பிதா ஒன்பதா நாள் அறிந்து தான் நேரே முழுதும் பார்க்க எண்ணித் திருக்கோயிலுக்கு வந்தார். புத்திரராகிய சிவப்பிரியர் பூசையை முடித்துக் கொண்டு மீண்டு திரும்பி வந்தவர் பக்கத்தே நின்ற பிதாவைக் கண்டு தொழுது நின்றார். பிதாவும் தான் வந்த காரணத்தைப் புத்திரருக்குச் சொல்லாமல் கிருகம் போய்ச் சேர்ந்தார். மறுநாள் அப்பிதா திருக்கோயிலில் நாவல் மரத்தில் வந்து ஒளித்திருந்தார். புத்திரர் தமது பழையமுறைப் படியே பூசை செய்து மூலமந்திரம் செபம் பண்ணும் வரையும் பார்த்திருந்து புத்திரர்பால் வந்து "பிதாவை முன்னவன் தலைவன் குரு என்றும் அவன் உரைத்தபடி செய்தல் பயன் பெறுமென்றும் வேதாகமங்கள் சொல்வதை யறியாய் போலும். நமது உரையை மறுத்து நீ இதனைச் செய்தது என்ன காரணம் என்று சொன்னார்" இச் சொல் சொன்ன மாத்திரத்தில் சிவபூசைக்கு விரோதஞ் சொல்லியதோ வென்று அதரத்தடிக்கக் கோபித்துச் சிவசிவ வென்று இயம்பிக் கையில் ஓர் கோலையெடுத்துப் பிதாவுடைய பதம் சாயும்படி அடித்தார். பிதாவும் விழுந்தான். சிவப்பிரியர் அதுவும் போதாது பிதாவினுடைய கழுத்தை யறுக்கக் கையில் வாளெடுத்து வருதலும் சிவபெருமான் ஒரு வேடனாய் வந்து வாளைப் பறித்துக்கொண்டார். உடனே சிவப்பிரியர் இரசை

நிலத்திலமைந்தார். சிவபெருமான் அவர் மனசின் அன்பை யறிந்து அம்மையார் வாம பாகத்திற் பொருந்த ஸ்ரீ கண்ட மூர்த்தியாய் இடபாரூடராய் அச்சிவப்பிரியர் முன்னே எழுந் தருளினார். அது கண்டு சிவப்பிரியர் இரு கண்களினின் றும் ஆனந்த வருவி பொழிய மனம் நெக்கு நெக்குருக ஆன ந்த வெள்ளத்தில் மூழ்கி ரோமாஞ்ச முண்டாக அஞ்சலி செய்து நிலத்தில் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரித்தார். நமஸ்கரித்து எழாது கிடந்த குழந்தையைப் பக்தசநேசர் தமது அருமைத் திருக் கரங்களால் தூக்கி யெடுத்துத் தொ டையின் மீது வைத்துப் புழுதியைத் துடைத்தருளினார். மனோன்மனி அம்மையாரும் தமது முன்றானையினால் துடை த்தருளினார். அப்பொழுதே சிவப்பிரியராகிய குழந்தை ஞானி யுருப்பெற்று விளங்குதலும் இந்திரன் முதலிய தேவர்கள் முனிவர்களெல்லாம் வந்து சேர்ந்தார்கள். குழந்தையைச் சிவபெருமான் கண்ணுற்று "அடியார்களுக் கெல்லாம் சிறப்பு டைய நீ செய்த பூசையைக்கண்டு பெரிதுமுவந்தோம். நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார். சிவப்பிரியரும் பர மசிவனைப் பலவாறு துதித்து "எம்பெருமானே! தேவரீர் பக்கத்தில் அடியேன் உறைக. தேவரீரது பூசையை வெறு ப்பவர்களை அடியேன் தண்டிக்க, இந்தப்பிரகாரம் வரமளித் தருள்க." என்று பிரார்த்தித்தார். கிருபாசமுத்திரமாகிய பக் தசநேசுவரர் சிவப்பிரியர் வேண்டிய வரங்களை அளித்தருளி

த்தாம் தரித்தருளிய திருவெண்ணீறும் பொன்னுடையும் முடியும் திருமாலையும் பிரம்பும் மழுவும் என்னு மிவற்றையுந் தந்தருளிக் 'குழந்தாய்! உன் மனதில் விரும்பியது எதுவோ அது நமக்குவப்பாகு'மென் றுரைத்து 'உன்னைத் தவஞ்செய்து பெற்ற உனது பிதா உனது சிவ பூசா பலத்தால் பிறவி நீங்கி நமது பரம பதத்தை அடைக' வென்று அருளிச் செய்தார். உடனே ஆகாயத்தில் தேவர்கள் முனிவர்கள் ...ப் புஷ்பவிமானம் வந்தது; அதில் சிவப்பிரியரை எறும்ப ... ஆஞ்ஞாபித்துப் பிதாவாகிய கலியாண சிவாசாரியர்மேல் ஸ்வாமி திருக்கண் சாத்தியருள அவர் உயிர் பெற்றெழுந்து சிவப்பிரியரோடு அப்புஷ்ப விமானத்தின்மே... சிவாபிஷேகத்துக்குப் பால் கொடுத்தும் தரிசித்தும் ...மக் தைக் கேட்டும் வந்த இடையர்களையும் புஷ்ப...தின் மேல் அமருக வென்று பக்தசேசுவரர் அருள்புரி... புஷ்ப விமானத்தின் மேலேறிய இப்புண்ணியரனைவர்...கை ...சத்துச் சிவகணங்களாய் வீற்றிருந்தார்கள். ...குமா...க்கும் பார்வதி தேவியார்க்கும் நடுவேயிருந்து ...வபூசை ... வெறுத்தவர்களைத் தண்டித்துக்கொண்டு அத்தியந்த ...பத்தினால் 'சண்டேச' வென்னும் நாமத்தைச் சிவப்பிரி...டைந்தார்.

...சிவபெருமானை அருச்சித்துச் சண்டேசனென்னும் நாமத்தைப் பெற்ற இடமாதலால் திருசேவலூர் சண்டேசபுர

மென்று பெயர் வழங்கப் பெற்றது. திருநாவலூரில் வட பால் சிவப்பிரிய பக்தர்கள் தன்னைக் குறிக்கும்பொருட்டுப் பாணை தீர்த்தத்தினின்றும் நீர் வருவித்த ஓடையைக் 'கோமுக தீர்த்த'மென்றும் பெரியோர்கள் வழங்கிவருவாராயினர். அவ் வுத்தம தீர்த்தத்தில் மார்கழி மாதத்தில் அருணோதயத்தில் நீராடிப் பக்தசண்டேசுவரர் பாதங்களைத் தரிசிப்போர் பிறப்பிறப் பொழிந்து சண்ட ரூபம் பெறுவார்கள். மாசந்தோறும் எழுதுவோர்கள் இக்கதையைப் படிப்பவர்கள் கேட்டவர்கள் சிவகதி பெறுவார்கள்.

சண்டேசுவரர் பூசித்த சருக்கம்
முற்றிற்று.

௧

சிவமயம்.

கருடன் பூசித்து விடவாதை தீர்ந்த சருக்கம்.



தந்தாவார கற்பத்தில் கலியுகத்தில் மகாவிஷ்ணு ஆதிசேஷ சயனத்தின்மீது பரமசிவனைத் தமது இருதய புண்டரீகமத்தியில் தியானம் பண்ணிச் சிவயோக நித்திரை செய்தார். அப்பொழுது அவ்விஷ்ணுவைத் தாங்கிச் சயன மாயமைந்த ஆதிசேஷன் அச்சிவயோக கனம் பொறுக்கலாற்

றது சரீரம் அயர்ந்து பொருமச்செய்யக் கரிய பெரிய விஷம் எழுந்து இவ்வுலகமுழுதும் பரவியது. அவ்விஷத்துக்கு எதிராக வந்த கருடனுடைய சரீரத்தில் அவ்விடம் பற்ற அதனால் அவனது [illegible] கருகியது. அதுகண்டு க[illegible] மனம் சுழன்று தளர்ந்து இவ்வுலகத்துள்ள பல [illegible]களிலும் வந்த ஸ்தலங்களை அடைந்து விஷ மரணத்தை அகற்றிப் பலனளிக்க வல்லது? [illegible] எங்குள்ளது? என்று மனதில் ஆலோசித்தான். அப்பொழுதே அவ்விஷமானது பரந்து உலக முழுதையும் கொல்லவிட முயன்றது. அவ்விஷத்தைக் கைலாசபதியினது நிழல் வடிவிலே காளிய சக்கரர் [illegible] [illegible] பற்றி [illegible] பழம்போல [illegible] அதனை [illegible] கைலாசபதியானது திருக்கரத்தில் கொடுத்தார். அதை [illegible] பார்த்து 'இந்த விஷம் [illegible] காலன் [illegible] பழமாய்ப் பறந்துச் சாப் [illegible] விழுந்த [illegible] கொடிய இயல்பு நீங்குக. இ[illegible] [illegible]க்கு விஷபீடை ஒழிக. என்று [illegible] இந்த சமா[illegible]தைக் கருடன் தெரி[illegible] [illegible] [illegible]க திருக வலூரில் [illegible] நீரா[illegible] [illegible] பக்கத்தில் எ[illegible] [illegible] [illegible] சனை செய்து [illegible] ஆயிரம் தி[illegible] ஸ்தோத்திரம் [illegible] நமஸ்கரித்தா[illegible] தன்பின் திருகா[illegible] மகேஞ்ஞ்பணிய

ம்மையாரையும் விதிப்படி பூஜைசெய்து இந்தப் பிரகாரம் மூன்று வருஷம் தவமிருந்தான்.

அது கண்டு மஹேஸ்வரி சமேதராகிய சபாநாதர் பிர சன்னராய் அக்கருடன்முன் எழுந்தருள அவரது திருமுக விலாசம் என்னும் மந்திரத்தினையும் கடாக்ஷாநுக்கிரகமென் னும் அமிர்தவாரியினையும் விஷமகன்று விண்ணோர் மண் ணோர் எல்லாம் அதிசயிப்ப முகம் வெளுத்துச் சரீரம் ஒளி யும் வலியும் பெற்று எழுந்து கருடன் அன்பு மகிழ்ச் சியும் மிகுந்து ஆநந்த வாரிதியில் மூழ்கி மெய் மறந்து கிடந்து சிவப்பரவசமாகினன். ஸ்வாமி 'கருடா! நீபுரிந்த பூசை கண்டு மகிழ்ந்தோம். உன் மனசில் விரும்பிய வண்ணம் அருள் புரிவோம். கேட்கக் கடவாய்' என்று அருளிச் செய்யக் க[illegible] உளங்குளிர்ந்து கண்களில் பாஷ்பமாருவி பொழிய த[illegible]ண்டு கறுத்த கண்டமுடைய ஸ்வாமீ! வி ஷ[illegible] அது நீலமாக அபர்ந்த துன்பம் நீங்கி இ ன்பம் [illegible] விஷத்தீண்டி வருந்துவார்களே [illegible]வர்க ள் என[illegible] மனசில் நினைத்தார்களானால் [illegible] தீண்டிய[illegible] இருள்போல [illegible]ம் [illegible] ம் தந்த[illegible]க்கான். 'ஸ்வ[illegible] பே வரந்தந்[illegible] அருளிச்செய்து [illegible] த்துள் மறைந்த[illegible]

கருடன் [illegible] தகை யமிரெல்லாம் நாகாந்தகன் என்னும் [illegible] விளங்கப் பெற்றான். இப்படி வரங்கள் பெற்ற கருடன் ஆலய [illegible]த்தில் பூர்வ[illegible] [illegible]க்கத் திரு[illegible] [illegible]ந்திரன் முதலிய தேவர்கள் [illegible] விட்டு விமான[illegible] தங்கள் சகலையுமா ம[illegible]னைக அமர்ந்து [illegible] தீர்த்தத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆலயத்தை ஜீர்ணோத்தாரணஞ்செய்து மய[illegible]காவணம் அமைப்பித்து வியாசமுனிவர் அனுமதிப்படி பாலிகை தெளித்து [illegible] மிகழ்ந்த [illegible]ள் துவசாரோகணஞ்செய்து அன்று முதற் றிருநாளாகக் கொண்டு பல வாத்தியங்களும் ஒலிக்கத் தேவர்களும் முனிவர்களும் துதிக்கச் சதுர்த்தசித் திதியில் ரதோத்சவம் செய்து மறுநாள் தீர்த்தோத்சவம் செய்யும்பொருட்டு எண்ணி மேற்றிசையை நோக்கி இரண்டு பாணங்களைச் செலுத்தி அந்தப் பாணம் விழுந்த இடத்தில் மூக்கினாற் கி[illegible]க்கக் கிழித்த பிளவினின்று சுத்தோதகம் எழுந்து இரு கரையும் புரண்டு கடல்போலப் பெருகிக் 'கருடநதி' யென்று பேர்பெற்றுக் கோயிற்றென்றிசையிலே விளங்க அக்கருடதீர்த்தத்தில் ஓர் மண்டபம் அமைப்பித்து ஸ்வாமியையும் அம்மையையும் இடபாரூடர்களாக அம்மண்டபத்தில் எழுந்தருளச்செய்து தீர்த்தோத்ஸவம் முடித்தான். அதன்மேல் துவசாவரோகணம் செய்து

ஸ்வாமிக்குப் பூசைபண்ணித் துதிக்க விஷ்ணு மந்திரத்தி னும் விடமொழிய அநந்தனென்று மகிழ்ந்து வரம்பெற்றுன். அ[illegible] ஸையமய புத்லவனை பு[illegible]ருக் திருநாவ லூ[illegible] வந்து வ[illegible] வைத்தா[illegible]யச் சேர் ந்தான்.

கரு[illegible]ல் ஆவணி மாதத்தில் [illegible]பியில் [illegible] ஞல் விடமாறைத் தீர்த்தும். அக்கருடநதியி[illegible] [illegible] மூழ்கினோர்க்குத் தீவினையால் வருகிற பி[illegible]த்[illegible] தீர் துவிந்[illegible]கதையைப் படிக்கோர் கே[illegible]ரும் [illegible] பிணையி[illegible] யகழ்வார்கள்

கருடன்பூசி[illegible]விடம்போதைதீர்த்த சருக்கம் மு[illegible].

உ

சிவமயம்

சுந்தரமூர்த்திஸ்வாமி திருவவ தாரச் சருக்கம்.

திருக்கைலாசமலையிலே செம்பொற்றிருக்கோயிலிலே மந்திரசிம்மாசனத்தின்மீது உமாதேவியார் வாமபாகத்தில் மருவ முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் ஸ்ரீகண்ட மூர்த்தியாய்ப் பிர்மா விஷ்ணு இந்திரன் இருடிகள் முனிவர்கள்

தேவர்கள் பதினெண் கணங்கள் திக்பாலர்கள் சேவிக்க அறு பத்தினாயிர பிரமதகணங்களை அனுக்கிரகம் செய்யச் சர்வசக்தி சமேதராய்ச் சுந்தரவிக்கிரகதாரியாய்ச் சர்வாலங்கிருத ராய் வீற்றிருந்தருளுவர்.

அங்கே ஒருநாள் சிவபெருமான் கனக அலங்காரத்தின் முகப்பில் தமக்கெதிரே அமைக்கப்பெற்றிருந்த கண்ணாடியில் தமது ஒளி பொருந்திய திருமேனியினது பிரதிபிம்பம் தோன்றக்கண்டு 'சுந்தர வருக' என்று தமது சந்நிதியலங்கத்திருவாக்கைத் திறந்து அழைத்தருளினர். அழைத்த மாத்திரத்தில் சிவகணங்களுக்கெல்லாம் அதிபதியாய்ப் பிரபாவினது திருஷ்டிக்குள் அடங்காது உலக வியல்பைக் கடந்து அதிகமாய் விளங்கும் சுந்தர சௌந்தரியமெல்லாம் திரண்டு ஒருருவாய்ச் 'சுந்தரர்' என்னும் நாமத்தோடு அற்புத மூர்த்தி வெளிப்பட்டருளினர். அப்பொழுது தேவர்களும் கணங்களும் சுந்தர மூர்த்தியை நமஸ்கரித்துக் கொண்டாடினர்கள். இது இப்படியாக

உமாதேவியார் கண்ணாடியில் தம்முடைய அழகிய திருமேனியைப் பார்த்துத் தமது இரு கண்களுங் களிப்புண்டாக அழைத்தருள, அவரது பிரதிபிம்பத்தினின்றும் இரண்டு பெண்கள் திருவவதாரமாய் வெளிவந்து அம்மையாரது திருவடியை வணங்கினர்கள். அவ்விருவர் திருநாமமும் 'கமலினி'

'அநிந்திதை' என்று வழங்கினார்கள். சுந்தரமூர்த்திகள் ஸ்வாமியிடத்திலும் கமலினி அநிந்திதை இருவரும் அம்மையிடத்திலும் அணுக்கர்களாய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்து அவரவர்க்குரிய பணியைச் செய்து வரும் நாளில் ஒரு நாள் கமலினி அநிந்திதை இருவரும் அம்மையாருக்குத் திருமாலைசாத்தும்பொருட்டு நறுமலர் கொய்யவேண்டி நந்தனவனம்போய்ச்சேர்ந்தார்கள். சேர்ந்து தமது பெண்மை விளையாட்டுகள் பலவும் பயின்று நறுமலர்கொய்தார்கள். அப்பொழுது சுந்தரராகிய சுந்தரமூர்த்தியும் ஸ்வாமிக்குத் திருமாலை சாத்தும் பொருட்டுப் பூக் கொய்யவேண்டி அந்நந்தனவனத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே பூமி செய்த மாதவம் விளங்கவும், தமிழ் மொழி தழைக்கவும், சைவம்ஓங்கவும், சிவாலயங்கள் மேம்படவும் அப்பெண்களிருவரையும் ஆசையோடு பார்த்தருளினார். அதுபோலவே அப் பெண்களிருவரும் சுந்தரமூர்த்தியை ஆசையோடு பார்த்தார்கள். இப்படி ஒருவரை ஒருவர் ஆசையுடையவராய்ப் பார்த்த பார்வையை அவ்விரு திறத்தாரும் அடக்கிக்கொண்டு தத்தம் ஆலயம் போய்ச் சேர்ந்தார்கள். நந்தனவனத்தில் அவரவர்பால் நடந்த சங்கதியை உயிர்தோறும் ஒளித்தகள்வராகிய கைலாசபதி அறிந்து சுந்தரமூர்த்தியையும் கமலினி அநிந்திதை என்னுமிருவரையும் பார்த்து "நீங்கள் நந்தனவனத்திற் போய் ஒருவரையொருவர் இச்சித்தமையால் பூலோகத்திற் பிறந்து இச்சித்த

பிரகாரம் இன்பம் அனுபவிக்கக் கடவீர்கள்." என்று அருளிச்செய்தார். அது கேட்டமாத்திரத்தில் ஸ்ரீசுந்தரர் நடுநடுங்கிக் கண்ணீர் பெருக முகம் வெயர்ப்ப அஞ்சலியஸ்தராய்ச் சில பாதாரவிந்தங்களில்விழுந்து "சுவாமீ, அடியேன் பேதைமையினாற் பிழை செய்தேன். அதைப் பொறுத்தருளுக. தேவரீர் பாதத்தை நீங்கி அடியேன் உய்வேனல்லேன். சிறுவர்கள் பகுத்தறிவின்மையினால் செய்த பிழையைப் பெற்றோர் பொறுப்பது முறையன்றோ? அடியேனைத் தேவரீர் புறம்பாக்கினால் அடியேன் என் செய்வேன்" என்று பிரார்த்தித்தார். ஸ்வாமி அதுகேட்டு "ஐய! நீ அவ்விரு பெண்களோடும் பூமியிற் றோன்றி இன்ப நுகரும் வியாசத்தால் நம்மைப் பூசை செய்வோனாய் நமது திவ்விய ஸ்தலங்கள் தோறும் போய் உலக முய்ய வேண்டி நமது குணமகிமைகளைத் திராவிட சூக்திகளாகிய திருப்பதிகங்களாகப் பாடக்கடவாய். இதுவே உன்னை அனுப்புவதின் பயன்" என்று அருளிச்செய்தார். சுந்தரர் அதுகேட்டு மனந்தேறி 'ஸ்வாமீ! அடியேன் தோன்றுதற்குரிய ஸ்தலம் யாது' என்று வினவினார். "ஐய! நாம் பக்தர்களுக்கு அருள்செய்யவேண்டி அதிகப்பிரீதியோடு எழுந்தருளியிருப்பதும் பார்வதி நம்மைப் பூசித்ததுமாகிய ஸ்தலம் திருநாவலூர். அத்திரு நாவலூரில் சடையனார் என்னும் சிவத்துவிசன் தனது மனைவியாகிய இசைஞானியோடு புத்திரனில்லாமையினால் புத்திரனை வேண்டி அருக்

தவம் செய்கின்றான். அவனது கிருகத்திற்போய் நீ அவதா ரம் பண்ணினால் உனக்குக்கலியாணம் புரியும் காலில் நாம் அதனை வந்து தடுத்து உன்னை ஆட்கொள்வோ' மென்று உரைத்தருளினார். அம்மையார் கமலினியைப் பார்த்துத் "தி ருவாரூரில் நல்லறிவும் நல்லொழுக்கமுமுடைய சனி என்னும் ருத்திரகணிகை ஒருத்தி இருக்கின்றாள். நீ அவள் பாற் போய் அவதரித்துச் சுந்தரரோடு இன்பநுகர்ந்து கைலைக்கு வருக" வென்றும், அநிந்திதையைநோக்கித் "தென்னாட்டில் ஞாயிறு என்னுமூரில் ஞாயிறுகிழவனென்னும் வேளாளன் ஒருவன் இருக்கின்றான். நீ அவன்பால் மகளாய் அவதரித் துத் திருவொற்றியூரில் சுந்தரனைக் கலந்து இன்பம் நுகர்ந்து கைலைக்கு வருக" என்றும் ஆஞ்ஞாபித்தருளினார்.

இது இப்படியிருக்க, பூலோகத்திலே காசி, திருக்கோகர் ணம், காஞ்சி, திருக்காளத்தி, திருவண்ணாமலை, திருக்கோவ லூர், திருவெண்ணெய்நல்லூர், திருநெல்வெண்ணை, சித்தீச ரம், நல்லூர், விருத்தாசலம், திருவறையணிநல்லூர், திருவி டைமருதூர், திருமுண்டீச்சரம், பிப்பிலாரணியம், திருவாமா த்தூர், வில்வநல்லூர், திருக்கண்டீச்சுரம், வடுகூர், திருவ திகை, திருப்பாதிரிப்புலியூர், திருக்கடவூர், சிதம்பரம், சீகா ழி, திருவெண்காடு, திருவேளூர், திருவாரூர், திரிசிரபுரம், தி ருவானைக்கா, திருமறைக்காடு, திருவாலவாய், மாயூரம், கும்

பகோணம், திருக்குற்றாலம், என்று சொல்லப்பட்ட ஸ்தலங்கள் பலவற்றுள்ளும் பஞ்சபூதஸ்தலங்கள் சிறந்தன. அவற்றுள் திருநாவலூர் திரேதாயுகத்தில் வன்னிவனமென்று வழங்கியது. அங்கே சிவபெருமான் வன்மீகத்துள்ளே சிவலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருப்பர். வன்மீகநாதராகிய ஸ்வாமியை ஓர் சுரபி தினந்தோறும் ஆறுகாலமும் தனது மடியினின்றும் பெருகின பாலினால் அபிஷேகஞ் செய்து தேன் முக்கனிகளை நிவேதித்துப் பூசித்துவரும் நாளில் ஒரு நாள் ஒரு புலி கண்ணில் தீப்பொறிகால வாலால் அடித்துப் பாய்ந்துவர அதனை அச்சுரபிகண்டு சிவலிங்கப்பெருமானைப் பார்த்து அம்மா அம்மா வென்று கூச்சலிட்டு அரற்றியலறச் சுவாமி கண்டு சிவலிங்கத்தினூடு தோன்றிப் புலியைக் கொன்று அந்தச் சுரபிக்கு முக்திகொடுத்தருளினார். அதனால் அவர் பசுபதி யென மண்ணுலகிலும் விண்ணுலகிலும் பேர் வழங்கப்பெற்றார். மார்கழி மாதத்தில் விதிபாதத்தில் வன்மீகநாதரை வான்மீகி, வசிட்டர் என்னும் முனிவர்கள் அருச்சனை செய்து பசுபதி யென்று ஸ்தோத்திரம்பண்ணினார்கள் அவ்வன்னிவனம் கலியுகத்தில் திருநாவல்வனம் என்று வழங்கி வருகின்றது. அத்திருநாவல்வனத்தில் பாரத்துவாசர் அத்திரி, அங்கிரா, காசிபர், கௌசிகர், என்னும் பஞ்சரிஷி கோத்திரத்தில் ஒன்றாகிய கௌசிககோத்திரத்தில் ஆரூரர் என்னும் ஆதிசைவர் உளராயினார். அவர் மனைவி சௌந்தரி

யார். அவ்விருவருக்குச் சடையர், சிகாமணி, சூடாமணி என்னு மூன்று புத்திரர். அவர்களுள் சடையனருக்கு இல்லறத்தில் மகப்பேறின்றி மனந்தளர்ந்து தமது மனைவியாராகிய இசைஞானியாரோடு பரமசிவனை நோக்கி அருந்தவஞ் செய்வாராயினர். அப்படிச்செய்து வரும் நாளில் ஒருநாள் சிவபெருமானது திருவருள் கைகூடச் சடையனர் இசைஞானியாரோடு மலரணையில் கலந்திருக்கும் சமயத்தில் தம்மிருவர்க்கும் புத்திரப்பேறு இல்லாமையை நினைந்து கவலை அவ்விருவர்மத்தியில் ஆவணிமாசத்தில் பானுவாரதினம் உத்தர நட்சத்திரத்தில் சொர்ண ரத்நாபரணங்களைப் பூண்டு மூன்று பிராயமுடைய குழந்தையாய்ச் சோதிசொரூபராகிய சுந்தரர் சிவதுல்லியராய்த் தோன்றியருளினர். சோதியாய்த் தோன்றிய மூன்று பிராயமுடைய அக்குழந்தையைச் சடையனர் கண்டு இது சிவனருள் என்று கண்டு கையினால் எடுத்துத் தோளில் அணைத்துக்கொண்டார். தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள். வானதுந்துபிகள் முழங்கின. தந்தை தாயிருவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினர்கள். இந்த அதிசயத்தைத் திருநாவலூர் வாழ்வார் தெரிந்து அவ்விருவர் தவப்பயனையும் வியந்து பலவிதமாக முகமனுரைத்துக் கொண்டாடினர்கள். சடையனர் அளவில்லாத களிப்புடையராய்ச் சொர்ணம் வஸ்திரம் பசு முதலிய தானங்களையெல்லாம் அந்தணர்க்கு அளித்து அக்குழந்தை நாயகர்க்கு "நம்பியாரூரர்"

என்று நாமகரணஞ் செய்தார். நம்பியாரூரராகிய குழந்தை ஒருநாள் அரைஞாணும் சதங்கையும் ஒளிசெய்யச் சிறுவர்களோடு திருநாவலூர்த் தெரு வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடுவாராயினர். அப்பொழுது திருமுனைப்பாடி நாட்டுக்கரசராகிய நரசிங்கமுனையரையர் அத்தெருவீதியில் யானைமேற் பவனி வருவாராய் அங்கே விளையாடிக்கொண்டிருந்த ஆதிசைவ குமாரராகிய நம்பியாரூரரைக் கண்டு மனமகிழ்ந்து யானையினின்றும் இறங்கிக் கையினால் எடுத்தணைத்து அன்பிறந்த புத்திரவாற்சல்லிய முடையவராய் ராஜ குமாரர்களுடைய முறைமைக் கேற்பப் பீதாம்பரம் ஆபரணங்கள் அணிந்து ஆஞ்ஞாசக்கர அரசுரிமையுந் தந்து வளர்த்து வந்தார். நம்பியாரூரர் அரசிளங்குமரர்போல் வளர்ந்தும் தமது வைதிக சைவமரபிற்கேற்ப அந்தந்தக் காலங்களில் அந்தந்தச் சடங்குகளை நூல்கள் விதித்தவாறே நிகழ்த்தப்பெறுவராதலால் அவருக்கு ஐந்தாம் வயது வந்தவுடனே சடையனார் தமது கிருகத்தில் குழந்தைக்கு வித்தியாரம்பஞ் செய்வித்து நூல்களையெல்லாம் பயிற்றிக் கற்றோர்களெல்லாம் வியக்கச் சர்வசாஸ்திரபாரங்கதர் என்னும் முறைமையையுஞ் செய்வித்தார். உரிய காலத்தில் உபநயநம் நடந்தது. அதன்பின் சமயம், விசேஷம், நிர்வாணம் என்னும் மூன்று தீக்ஷையும் நம்பியாரூரர் பெற்றுக்கொண்டார். அதன்மேல் நம்பியாரூரருக்குத் திருமணப்பருவம் வந்து சேர்ந்தது.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருவவதாரச் சருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத் தாட்கொண்ட சருக்கம்.



நம்பியாரூரர்க்குத் திருமணப்பருவம் சேரத் தந்தையாராகிய சடையனார் தமது பந்துக்களாகிய ஆதிசைவரை வரவழைத்து 'எனது குமாரன் சகல கலைகளையும் படித்து முற்றுப் பெற்றான். இனி, குணம் அறிவு குலம் இவற்றால் உயர்ந்த கன்னிகை நமது இனத்தாளாய் வேண்டப்படுவள்' என்று தெரிவித்தார். அதற்கு அவர்கள் 'சுந்தரர்க்கியைந்த மணப் பெண் புத்தூரில் சடங்கவி சிவாசாரியர் மகள்தான்' என்று சொன்னார்கள். சடையனார் அந்தப்பெண்ணை மணம்பேசி வருகவென்று அவர்களிடத்திற்சொல்ல, அவர்கள் சடங்கவியார் வீட்டுக்குப்போய்க்குலம் கோத்திரம் முதலிய சொல்லிப் பெண்கேட்கச் சடங்கவியார் உடன்பாடு செய்ய அவர்கள் நம்பிக்கு அந்நங்கை உரியாளென்று சடையனாரிடத்தில் வந்து தெரிவித்தார்கள். சடையனாரும் மனமகிழ்ந்து திருமணத்திற் குரியகாலமாக வைகாசி மாசத்தில் சுபலக்கினமொன்று நிச்சயித்துக் கலியாணத்திற்கு வருதற்குரியரெல்லாம் வரும்படி மணவோலை யனுப்பித் திருநாவலூர் நகரத்தை அலங்கரிப்பித்தார். பந்து மித்திரர்கள் குழாம் குழாமாக வந்து

சேர்ந்தார்கள். வந்தவர்களுக்கெல்லாம் முகமனுரை வழங்கி அவர்களுக்கு இடம் பொருள் ஏவல் முதலிய உபசாரங்கள் அமைப்பித்துச் சடையனார் தமது திருக்குமாரர்க்குத் திருமணக்கோலம் செய்வித்தார். அப்பொழுது நரசிங்கமுனையரையர் தமது ராஜ வரிசைகளோடு வரவும் வேதியர்களும் சுற்றத்தார்களும் ஆடவர்களும் மகளிர்களுமாக நெருங்கி வரவும் மணவாளராகிய நம்பியாரூரரைப் பொற்சிவிகையின் மேலேற்றி மங்கலவாத்தியம் முழங்கப் புறப்பட்டார்கள். புத்தூரில் சடங்கவிசிவாசாரியர் மாடங்களைப்புதுக்கிப் பூர்ண கும்பங்களைவைத்து அகிற்புகை ஊட்டி வீதிகளிலெல்லாம் காவணம் இட்டு வாழை கமுகு நாட்டி மணிமாலை மலர்மாலைகளும் தொங்கக்கட்டி மாணிக்கதீபங்கள் அமைத்து அலங்காரஞ் செய்வித்தார்.

திருநாவலூரினின்று ஆடவரும் மகளிரும் திருமணவாளரோடு புறப்பட்டுப் புத்தூர் வந்துசேரச் சடங்கவி சிவாசாரியார் முதலியோர் எதிர்கொண்டுதழுவி உபசரித்தார்கள். திருமணத்துக்கு வந்தவர்கள் சடங்கவி சிவாசாரியர் கிருகத்தில் திருமணச்சாலைபோய்ச் சேர்ந்தார்கள். திருமணச்சாலையில் அங்குரார்ப்பணம்செய்து நம்பியாரூரருக்கு ரக்ஷாபந்தனம் பண்ணினார்கள். அன்று செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம்செய்து மறுநாள் நம்பியாரூரரைத் திருமஞ்சனமாட்டி

வித்து மணவாளக்கோலஞ்செய்தார்கள். நம்பியாரூரரும் திருவைந்தெழுத்தை உட்கொண்டு திருவெண்ணீறுசாத்தி யானையின்மேல் ஆரோகணித்து வீதியில் வந்தார். வீதியில் அநேக ராஜவரிசைகளோடு ஆடவர் மகளிரெல்லாம் பலவிதமாகக் கொண்டாடப் பவனிவந்து திருமணச்சாலைபுகுந்து ஆசனத்தின்மேல் வீற்றிருந்தார். சடங்கவி சிவாசாரியர் தமது மகளைராட்டி மணக்கோலஞ் செய்வித்துப் பாங்கியர்கள்கையாலணைத்துச் சேவித்துவரத் திருமணச்சாலையில் நம்பியாரூரர் அருகேயிருத்தி ஓமம் முதலிய கிரியைகளைச்செய்து தாரை வார்த்துத் தத்தம்பண்ணப் புகுவாராயினர்.

அங்கே முன் திருக்கைலாசத்தில் சிவபெருமான் தாம் வாக்களித்தருளியபடி நம்பியாரூரரைத் தடுத்தாட்கொண்டருள விரும்பிக் கன்றைநோக்கிய பசுவின் வரவைப்போலக் கையிற்கோல் பிடித்துக்கொண்டு ஒருவேதியவிருத்தராய் மூப்பினால் தளர்நடைகொண்டு விரைந்து திருமணச்சாலையில் வந்து நின்றார். அங்கிருந்தவரெல்லாரும் அவரது வரவையும் விருத்த வைதிக வேஷத்தையும் கண்டு கைகுவித்துக் கும்பிட்டு வந்தனஞ்செய்தார்கள். சிவபெருமானாகிய விருத்தவேதியர் "சபையோர்களே! நாம் சொல்வதொன்றுளது. அதைக் கேளுங்கள்" என்றார். வேதியர்களும் நம்பியாரூரரும் "சுவாமீ! நாம் முன் செய்த தவத்தால் தேவரீர் இவ்விடத் தெ

பூர்ந்தருளப் பெற்றோம். தேவரீர் கொண்ட கருத்தைத் திரு வாய்மலர்ந்தருளுக" என்றார்கள். சுவாமி அப்போது நம்பி யாரூரரைப்பார்த்து "உன்னிடத்தில் நமக்கு வழக்கிருக்கின் றது. அதை முடித்துவிட்டுப் பின் மணம்புரியக் கடவாய்" என்றார். அதுகேட்டு நம்பியாரூரர் 'சுவாமீ, என்னிடத்தில் வழக்குளதாயின் அதை முடித்தபின்புதான் மணம்புரிவேன் அதனைச்சொல்க' என்றார். வேதியர் "அந்தணர்காள், இந்த நம்பியாரூரன் நமது அடிமை" என்று அருளிச்செய்தார். மா லயன் இருவரையும் மற்றுந் தேவரையும் அடிமை கொண்ட தேவர்கோமானாகிய வேதிய விருத்தர் கூறிய மொழியையின விச் சபையிலிருந்த பிராமணரெல்லாம் "பொருந்தாமொழி புகன்றார் இவ்விருத்தர். இஃது என்னை!!" என்று மனசில் எண்ணினார்கள். நம்பியாரூரரும் மிகச் சிரித்தார். அதுகண்டு விருத்த வேதியர் 'உன்பாட்டன் எழுதித்தந்த அடிமையோ லை நம்மிடத்தில் இருக்க நீ சிரித்தது என்னை' என்று புருவ ம் நெறிக்க வற்கலை நெகிழ முன்வந்துநின்று சினந்துரைத் தார். சபையிலுள்ள அந்தணர்கள் 'ஸ்வாமீ, கோபத்தைவி டுக' என்றார்கள். மணவாளராயிருந்த நம்பியாரூரர் 'பிராம ணர்க்குப் பிராமண ரடிமை என்னும் புதுமை இன்று நீபேச நாம் கேட்டோம். நீயார்? பித்தனோ!' என்றார். 'பித்தனெ ன்று உரைத்த உரைக்கு நான் நாணேன். உன் பாட்டன் எ ழுதித் தந்த அடிமை ஓலை இதோ இருக்கின்றது, அதைப்பா

ர்க்துப் பின் பேசுவதைப்பேசு' என்று உள்ளத்தில் அன்பும் முகத்தில் கோபமும் பொருந்த உடல் துடிக்க விருத்த வேதியர் சொன்னார். அந்த உண்மையை அறியும் பொருட்டு 'அடிமை ஓலையைக் காட்டுக' என்று நம்பியாரூரர் சொல்ல 'ஓலையின் உண்மை யறிதற்கு வற்ற தகுதியை நீ உடையையல்லே. பிராமணர்களுடைய சபையில் தெரிவிப்பேன்' என்று திருப்ப, நம்பியாரூரர் கோபித்து ஓலையைக் கைப் பற்றும்படி செல்ல, விருத்தவேதியர் முன்னே ஓட நம்பியாரூரர் பின்னே ஓடிக்கையிலுள்ள ஓலையைப் பறித்துக் கிழித்தார். மாலயனும் வானவர்களும் முறையோ முறையோ வென்று ஓலிட அஞ்சல் அஞ்சல் என்று அபயங்கொடுக்கும் வலியராகிய விருத்த வேதியர் ஓலை கிழிபட்டவுடனே முறையோ முறையோ வென்று ஓலமிட்டார். பிராமணர்கள் அவரை விலக்கிப் 'பொருந்தா வழக்குப்பேசும் விருத்தரே ! உமது இருப்பிடம் யாது ? சொல்லும்' என்றார்கள். 'நாம் இருப்பது திருவெண்ணெய் நல்லூர். இவன் நமக்கடிமை என்பதை ஒப்பிவருவதன்றி ஓலையையுங் கிழித்தான். வேதியர்காள் ? நீங்கள் பார்க்க ஓலையை இவன் வலிந்து கிழித்தகனால் எனது வழக்கு வென்றதாயிற்று. அதனோடு இவனுடைய பாட்டன் முன் எனக்கு எழுதிக்கந்த மூலவோலை என்னிட மிருக்கின்றது ஆதலால் வெல்லிக்குக் காரணம் இன்னும் எனக்குண்டு' என்று மேலும் உரைப்பாராயினர். 'வழக்குண்டாயில் பேசிவெ

ல்லதன்றோமுறை. கையிலிருந்த தலையைப்பற்றி இவன் கிழி த்தானே இவனைப்பற்றித் திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்வேன்.' என்று விருத்தவேதியர் உரைத்தார். அதுகேட் டுப் பிராமணர்கள் 'விருத்தரே இருவரும் சண்டையிடுதல் நீதியன்று. நீங்களிருவரும் திருவெண்ணெய் நல்லூரந்தணர் கள்தீர்த்தபடி நடந்துகொள்ளுங்கள்' என்றார்கள். அதற்குட ன்பட்டு வேதியர் முன்னே செல்ல நம்பியாரூரர் பின்னேசெ ன்றார். அவரது பிதாவும் பந்துக்களும் மற்றையோரும் எந்த நாளிலுமில்லாத இந்த வழக்கு என்னுமோ என்னுமோ என் று பரபரத்த மனைசயுடையவர்களாய்த் திருவெண்ணெய் நல்லூருக்குச் சுந்தரரோடு சுவாமியைத் தொடர்ந்துசென் றார்கள். நம்பியாரூரர் திருமணத்தைத தடுத்து விருத்தவேதி யர் திருவெண்ணெய் நல்லூருக்கு வருகிற சமாசாரத்தை அ ங்குள்ள மறையோர் கேட்டு அதன் காரணத்தை அறிவோ மென்று எல்லாரும் ஓரிடத்திற் கூடினார்கள். விருத்த வேதி யர் சுந்தரரோடு அங்கே செல்ல அம்மறையோர்கள் 'முனி வரே! எழுந்தருளுக. இங்கே வந்த கருமம் யாது? உமது பக் கத்தில் வந்தவர் யாவர்?' என்று வினவச், சுவாமி 'அந்தண ர்காள் மணக்கோலங் கொண்டிருக்கும் இவன் எனது அடி மை. என் வார்த்தையைக் கேளானாய் முன்னாளில் இவன் பா ட்டன் எழுதித்தந்த அடிமையோலையையுங் கிழித்தான். இந் த வழக்கை உங்கள்பாற் சொல்லவந்தேன். இதனைப் பழுதற

ஆராய்ந்து தீருங்கள்' என்றார். சபையோர் அது கேட்டுப் 'பிராமணர்களுக்குப் பிராமணர் அடிமையாதல் உலகத்திலில் லையே. இது என்ன வழக்கென்று சொன்னீர் ஐயா!' என்று ர்கள். 'பாட்டன் எழுதித்தந்த ஓலையை இவன் கிழித்தால் அதுவே வழக்கன்றோ!' என்று சுவாமி சொன்னார். மறை யோர்கள் 'நம்பியாரூரரே உமது கருத்து யாது' என்று கே ட்கப் "பெரியோர்களே, என்னை ஆதி சைவன் என்று நீங்கள் அறிவீர்களோ; ஈரமில்லாத நெஞ்சோடு இவர் தமக்கு நான் அடிமையென்று சாதித்தால் நான் என்ன சொல்லத்தக்கது" என்று கவன்று சொன்னார். விருத்தரை நோக்கி, "சுவாமீ, இவர் உம்முடைய ஓலையைக் கிழித்தாராயினும் வேறு சாட்சி உண்டாயிற் சொல்லும்" என்று மறையோர்கள் கேட்டார் கள். "கிழித்தது படியோலை மூலவோலை என்னிடத்திலிருக் கிறது" என்று மூன்றுருக்கொண்டு முத்தொழிலும் செய்யு ம் முதல்வராகிய வேதியர் அருளிச்செய்தார். 'மூலவோலை யைக் காட்டு' மென்று அந்தணர்கள் கேட்க 'இந்த அடிமை யானவன் பறித்துக் கிழியாதபடி சொல்வீராகில் காட்டு வேன்' என்று வேதியர் சொல்ல 'கிழிக்கவொட்டோம்' என் று வேதியர்கள் ஒப்புக்கொண்டார்கள். அப்படியே மூலவோ லையை அவர்கொண்டுவரச் சபையோர் ஏவற்படி ஒருவன் சுருளை நீக்கி "திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தனுர்க்குத் திரு நாவலூர் ஆதிசைவனாகிய ஆரூரன், நானும் புத்திர பௌத்தி

ராதியாகவரும் என் மரபினரும் வழிவழியடிமைகளாகுக. இது உறுதியாக நான் எழுதித்தந்த அடிமை ஓலை. இப்படிக்கு என்னெழுத்து" என்று அதிலிருந்தபடியே வாசித்தான். அந்த ஓலையின் எழுத்துக்கேற்பப் பாட்டனாராகிய ஆரூரர் எழுதிய மற்றும் ஓலைகளை வருவித்து ஒப்புநோக்கி 'இவ்வோலை விருத்தர்பக்கம் வெற்றியைத்தந்தது. அவர்சொன்னபடி சரி' என்றார்கள் சபையோர்கள். 'ஆதலால் திருநாவலூர் நம்பியாரூரரே திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தர்க்கு உரியதொண்டர். நீர் செய்வதே முறை' என்று சபையோர்சொன்னார்கள். 'எனக்கு முன்னாள் விதித்ததுவாயின் யான் இசையேனென்றல் ஏற்குமா' என்று செயலற்று நம்பியாரூரர் நின்றார். சபையோர், 'விருத்தராகிய ஸ்வாமீ, நீர்காட்டியவோலையில் உமது ஊர்ப்பேர் இருக்கின்றது. இவ்வூரில் உமது குடியிருப்பு எங்கே? எமக்குக்காட்டு" மென்றார்கள்; வேதியராகிய முதல்வர் 'என்னை நீங்கள் அறியீர்களாயின் எழுந்து உடன் வாருங்கள்' என்று அந்தணர்கள் சூழத் தொண்டரும் பின்னே செல்லத் திருவெண்ணெய்நல்லூர் ஆலயமாகிய திருவருட்டுறையிற்புகுந்தார். போனவர்கள் வேதியரைக் காணாது மயங்கிநின்றார்கள். 'வேதியர் கோயிலிற் புகுந்ததென்னே? இவர் சிவபெருமானே' என்று எல்லாரும் மெய்சிலிர்த்துக் கண்ணீரருவிபாய ஆனந்தவெள்ளத்தில் முழுகினார்கள். நம்பியாரூரரும் மெய்ம்மயிர் பொடிப்ப அழலிடைப்பட்ட மெழுகுபோல

நெக்குநெக்குருகி ஆனந்த வருஷிபொழிய உச்சியிற் கூப்பிய கையராய்ப் பலவிதமாகத் துதித்துச், "சுவாமீ, அடியேன் அறியாமையால் அபராதஞ் செய்தேன், தேவரீர் இன்னும் ஒருமுறை காட்சிதந்து ஆட்கொள்வது தேவரீருக்குக்கடன்' என்று பிரார்த்தித்தார். பக்தவத்ஸலராகிய ஸ்வாமி திருவருள்சுரந்து அம்மையார் வாமபாகத்திற் பொருந்த ரிஷபாரூடராய்த் தமது தெய்வக் கோலக் காட்சி தந்து 'நம்பியாரூர, நீ கைலாயத்தில் எமக்குத் தொண்டன், அங்கே நாம் செய்த ஆஞ்ஞையினல் இங்கே நீ வந்து அவதரித்தாய்' உன்பேர் ஆலால சுந்தரன். நீ மண்ணுலகில் துன்பமாகிய குடும்பவாழ்வில் அகப்படாது நாம் வந்து உன்னைத் தடுத்தாட்கொண்டோம்' என்று அருளிச்செய்தார். அதை நம்பியாரூரராகிய சுந்தரர் கேட்டு 'ஆவணவோலை காட்டிவழக்கிட்டுத்தடுத்தாட்கொண்ட தெய்வமே, இனி அடியேன்செய்யும் ஏவலை இன்னதென்று அருளிச்செய்க' என்றார். 'சுந்தரா! நீ கோபத்தோடு நமது ஓலையைக் கிழித்து வீசி வன்மை செய்தாய். ஆதலினல் உனக்கு இனி வன்றொண்டன் என்னும் நாமம் வழங்குக. நீ செய்யும் பூசை பாட்டேயாகுக. நமக்கு இன்பமாகப் பதிகத்தைப் பாடக்கடவாய்' என்று ஸ்வாமி அருளிச்செய்தார். 'இப்பிறவியில் அடையும் பயன் இன்னதென்று அறியாத என்னை விப்பிரனுகிவந்து மெய்ஞ்ஞானம்தந்தருளிய ஸ்வாமீ! அளவில்லாத உமது குணப் பெருங் கடலில் எங்ஙனம் அள

ந்து உம்மை எங்ஙனம் பாடுகேன்' என்று வன்றொண்டர் இறைஞ்சி நின்றார். 'வன்றொண்டனே, நீ நம்மைப் பித்தனென்று சபையிற் சொன்னாயன்றோ? அதையே முதலாகக்கொண்டு பாடுக' என்று திருவருட்டுறைநாதர் அருளிச்செய்தார். அதுகேட்டுப் பரமாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனார் "பித்தா பிறை சூடீ" யென்று திருப்பதிகம் பாடினார். ஸ்வாமி நாயனாரைப் பார்த்து 'அன்பனே நாம் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களிலெல்லாம் போய் நீ நம்மைப் பாடுக' என்று ஆஞ்ஞை செய்து மறைந்தருளினார். திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட்டுறையாரது விடையருள் பெற்றுக் கொண்டு சடையனாரும் நரசிங்கமுனையரையரும் பிறரும் சூழ நாவலர் கோமானாகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் திருநாவலூருக்கு எழுந்தருளினார். சடையனார் நரசிங்கமுனையரையர் முதலியோர் சிவபக்தர்களாய் நமது சுந்தரமூர்த்திகளைச் சிவமென்று எண்ணி வாழ எம்பெருமான் அங்கே சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகமாலை சாத்தி வருவாராயினர்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைத் தடுத்தாட்கொண்ட
சருக்கம்-முற்றிற்று.

——( )——

சிவமயம்.

உற்சவம் புரிந்த சருக்கம்.



மனுநீதி முறைப்படி உயிர்களையெல்லாம் கண்ணுங்கருத்துமாய்ப் பரிபாலனம் செய்து வாழும் செங்கோன் மன்னராகிய நரசிங்கமுனையரையநாயனார் திருநாவலூர்ப் பக்தசநேசருக்கு உற்சவம் செய்விக்க நினைந்து கோபுரம் மதில் மண்டபங்கள் தூபியாவும் புதுப்பித்து நிலைக்கண்ணாடிகள் வைத்து முத்துமாலைகளைத் தூக்கி வந்த சிவனடியார்களுக்கெல்லாம் அன்னசாலை தண்ணீர்ப்பந்தல் அமைப்பித்து எண்டிக்கிலும் பலிபீடமிட்டு யாக சாலை வேத சாலை பாக சாலை கீத சாலை தியாக சாலைகளும் நிருமித்து மூஷிகம் மயில் கிளி யானை காமதேனு ரிஷபமுதலிய வாகனங்களைச் சுவர்ணமாக அமைப்பித்துத் தேரை அலங்கரிப்பித்துப் பூப்பந்தல்போடுவித்து வீதிகளில் வாழை கமுகு தோரணங்கள் நாட்டுவித்து எங்கும் கொடிகளைத் தொங்கக் கட்டி அங்கங்கு முத்தாரங்கள் தொங்கத் தூக்கிச் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளை முதனாள் ராத்திரி உற்சவாசாரியராகக் கங்கணம் புனைவித்துச், சிவாகம விதிப்படி விநாயகர் சுப்பிரமணியர் அம்மை சகிதம் ஸ்வாமிக்குச் சித்திரை மாசத்தில் பூர்வபக்கத்தில் ஷஷ்டி திதியில் துவசாரோகணஞ்செய்து பஞ்சமூர்த்திகளையும் அவரவர்க்

சூரிய வாகனங்களில் அநேக வரிசைகளோடு எழுந்தருளுவி த்து அதனோடுசுந்தரமூர்த்திகளையும் (நரசிங்கமுனையரையர்) தமது கண்ணுக்கும் கருத்துக்கும் உள்ளும் புறம்பும் ஒப்ப ஸாட்சாத் சிவமாகக் கண்டு நமது குல தெய்வம் இவரென்று துதித்து அவரை அலங்கரித்துச் சிவிகையின்மேல் எழுந்தரு ளுவித்துச் சுவாமி பக்கத்திலே திருவிழா வரும்படி செய்து அநேக கௌரவ சின்னங்களோடு இந்தப்பிரகாரம் எட்டுநா ள் வாகனோற்சவமும் ஒன்பதாம் நாள் ரதோற்சவமும் பத் தாந்திருநாளில் தீர்த்தோற்சவமும் நடத்தி அதன்பின் உற்ச வம் நடத்திய ஆதி சைவர் கோமானைப் புஷ்பவிமானத்தின் மீது ஏற்றி வாத்தியங்கள் முழங்க இருபோதும் உற்சவம் செய்து நதிஸ்நானம் பண்ணுவித்துத் துவசாவரோகணம் செய்வித்து, உற்சவ பரிசமாப்தி பண்ணுவித்துப் பக்தசனே சுவரர் திருவருளையும் சுந்தரமூர்த்திகளது திவ்வியப் பிரசாத த்தையும் பெற்றார்.

உற்சவம் புரிந்த சருக்கம்

முற்றிற்று.

சிவமயம்.

சுந்தரமூர்த்திஸ்வாமிகள் மகாபூசை செய்த சருக்கம்.

மகோற்சவம் முடிந்தவுடன் சுந்தரமூர்த்திகள் பக்த சநேசுரருக்கு மகா பூசை செய்யத் திருவுளங்கொண்டு நரசிங்கமுனையரையரைநோக்கி 'ஆயிரஞ் சங்கம் வைத்து அபிஷேகஞ்செய்து மகாதேவரைப் பூசிக்க விரும்பினேன்' என்று அனுக்கிரகஞ்செய்ய உடனே அரசர் கோமான் அதற்குரிய உபகரணங்களையெல்லாம் வருவித்துக் கொடுக்கத் தேசிகநாதராகிய சுந்தரமூர்த்திகள் சம்புநதியிற் றீர்த்தமாடித் தமது சிவகர்மங்களைமுடித்து விக்கிநேசுரரைப் பூசித்து மண்டபத்துள் நின்று அரணியிற் கடைந்தெடுத்த சிவாக்கினியினுல் ஓமஞ்செய்து ஆயிரம் சங்கம்வைத்து அருச்சித்துத் துவார பூசைசெய்து தைலம், மாப்பொடி, ரசவர்க்கம், கலவை, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பழவர்க்கம், இளநீர், சர்க்கரை, ரத்நோதகம், கந்தோதகம், சங்கதீர்த்தம் என்னுமிவை உள்ளிட்ட அபிஷேகத்தைச்செய்து பட்டு,ஆபரணம், சந்தனம், மாலை இவைகளைச் சுவாமிக்குச்சாத்தி அதுபோல மனோன்மனியம்மையாருக்கும் அபிஷேகஅலங்காரங்கள்செய்து சுவாமி அம்மை இருவருக்கும் தூபதீபங்காட்டி அன்னம், பாயசம், அப்பவர்க்கங்கள் பானீயம் தாம்பூலம் நிவேதித்து இருவருக்கும்

போகாங்க பூசைபுரிந்து சோடசோபசாரங்களும் செய்து திருவடியை நினைந்து ஆனந்தபாஷ்பம் பொழிய ஜெபகர்மா த்ம நிவேதனஞ்செய்து பலவித ஸ்தோத்திர பிரதக்ஷிண நம ஸ்காரங்களைப்பண்ணி ஸ்வாமி அம்மை இருவரையும் மீட்டும் நமஸ்கரித்து எழுந்து தக்ஷிணாமூர்த்தியை, சதாசிவத்தை, மே தாவினை மிகுந்த அன்பினால் தியானிக்க, மேதாவி தக்ஷிணா மூர்த்தி சுந்தரமூர்த்திகளுக்குப் பிரசன்னராய்க் "குழந்தாய் உன் அன்பிற்கும் நீசெய்த மகாபூசைக்கும் நாம் மகிழ்ந்தோ ம். வேண்டிய வரங்களைக்கேட்குதி' என்று அருளிச்செய் தார்." சுந்தரமூர்த்திகள் 'பாவிகளை மாயாமயக்கம் தவிர்த் து ஆட்கொள்ளவந்த எம்பெருமானே! எக்காலமும் தேவ ரீரை உமது சிவலிங்கத்திருமேனியில் அருச்சிக்கும் வரத் தை அருள்க' என்று வேண்டினார். அதுகேட்டுத் திருவுள மகிழ்ந்து தமது திருக்கரத்தால் சுந்தரமூர்த்திகள் நெற்றியி ல் திருவெண்ணீறுசாத்திப் படிகலிங்கமொன்று தந்தருளிக் குழந்தாய்! திருவெண்ணெய் நல்லூரில் நாம் ஆஞ்ஞாபித்த பிரகாரம் திருநாவலூரிலும் மற்றுள்ள ஸ்தலங்களிலும் நம் மைப்பாடுக, அதுவேநமக்குச் சால்வதமாகிய அர்ச்சனையாம். அதனோடு இப்பூமியில் அநேக திவ்வியபோகங்களை நுகர்ந்து முடிவில் பழைய ருத்திரவடிவத்தோடு நம்பால்வருக' என்று திருவாய்மலர்ந்தருளித் தக்ஷிணாமூர்த்தியாகிய பக்தசநேசவ ர் சிவலிங்கத்திற் கலந்தருளினார். சுந்தரமூர்த்திகளும் நரசி

ங்கமுனையரையரும சிவநாமம ஓதிச் சுவாமியால் மந்திரம்பெற்று ஆனந்தபாஷ்பம்பொழிந்து துதித்தார்கள். அதன்மேல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரம் முதலிய ஸ்தலங்களிற் போய்த் தரிசனஞ்செய்து திருப்பதிகங்கள்பாடித் திருவாரூரில்வந்து வன்மீகநாதர், தியாகராசப்பெருமானைத் தரிசனஞ்செய்து திருப்பதிகங்கள்பாடித் தியாகராசப்பெருமானது திருவருளினால் பரவையாரைத் திருமணஞ்செய்தும் திருவொற்றியூரில்வந்து சங்கிலியாரைத் திருமணஞ்செய்தும் சிவனருள்வண்ணமாகத் திவ்வியபோகங்களை நுகர்ந்து பதிகங்கள் பாடிப் பதினெட்டாவது வயதில் திருவஞ்சைக் களத்தில்வந்து சுவாமி தரிசனஞ்செய்து தமது பிரியாநண்பராகிய சேரமான் பெருமாள் குதிரைப்பவனிசெய்துசேவித்துவரத் தாம ஆகாய மார்க்கமாக வெள்ளானைப் பவனிவந்து மாலயன்முதலிய வானவர் கணம் தொழத் திருக்கைலாயததுக்கு எழுந்தருளினார். சுந்தரமூர்த்திகளைப்பெற்ற சடையனார் இசைஞானியாரிருவரும் வளர்த்துப் பூசித்த நரசிங்கமுனையரையரும திருநாவலூரி லிருந்தபடியே திருக்கைலாயம் புக்கார்கள். சுந்தரமூர்த்திகளுக்கு மனைவி யென்னும் நியமன பாக்கியம் பெற்ற புத்தூர்ச்சடங்கவி சிவாசாரியார் திருமகளாரும் சுந்தரமூர்த்திகளையே தியானம் பண்ணிக்கொண்டிருந்து சிவகதிபெற்றார். பரவையார் சங்கிலியாரிருவரும் அங்கங்கிருந்தபடியே திருக்கைலாயம் புக்கார்கள்.

முதல் யுகத்தில் வில்வவனமாயும் இரண்டாவதுயுகத்தில் வன்னிவனமாயும் மூன்றாவதுயுகத்தில் மகிழவனமாயும் நாலாவதுயுகத்தில் நாவல்வனமாயும் இருப்பது திருநாவலூர். இங்கே வந்து பக்தசனேசுரரைத் தரிசித்தோர் சிவகதிபெறுவார்கள்.

தொண்டர் நாயகர், ஞானேசுரர், மனோன்மணி நாயகர் விஷ்ணுபூசிதர், சம்புபுரேசுரர், சண்டேசானுக்கிரகர், கருடானுக்கிரகர், விஷபாத விமோசகர், சுந்தரதேவர், கபர்த்திசர், ஞானசாரியர், சுந்தரானுக்கிரகர் என்னும் இப்பன்னிரண்டு நாமங்களும் திருநாவலூருடையார்க்கு வழங்கும் திருநாமங்களாம்.

இத்திருநாவலூரரைத் தரிசித்தோர் சகலவினைகளும் தீர்ந்து இகபர முத்தி யின்பம் பெற்று இனிது வாழ்வார்கள், இந்தப் பிரகாரம் உபமன்னிய முனிவர் சதமன்னியர் முதலிய மாணாக்கர்களுக்கு உபதேசித்தருள மாணாக்கர்களாகிய அம்முனிவர்கள் உபமன்னிய குருபாதம் தலைமேற்கொண்டு திருநாவலூர் மான்மிய சிரவணானந்தத்தில் அழுந்தி இன்புற்றினிது வாழ்வாராயினர்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் மகாபூசை செய்த சருக்கம் முற்றிற்று.

திருநாவலூர் மான்மியம் முற்றிற்று.

ஸ்ரீ சுந்தரமூர்த்திஸ்வாமி துணை.

சேக்கிழார்பெருமான்சேவடிபாசுதுந்
சேக்கிழார்தமதருடிகழ்தாற்பொருட்டே

ஆறுமுகநாவலனடியிணைபரசுதுந்
தேறுமுகவின்பந்திகழ்தற்பொருட்டே.

திருச்சிற்றம்பலம்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் ...

உ

சிவமயம்.

திருநாவலூர் மான்மியம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	16	அபரிரக	அபரிக்க
18	6	அக்கை ககக்கள்	அக் கைககக்கள்
19	11	ஆலா கலம்	ஆலகாலம்
28	9	எழுந்தது	எழுந்தாய்
29	14	சதுர்க்கசிக்திகி	சதுர்க்கசித்திகி
31	2	திக்பாலர்	திக்குப்பாலர்
,,	19	பார்க்கு	பாக்கு
34	15	சித்தீசரம்	சித்திரசரம்